# தென்மொழி


## வெற்றி காண்போம்.

மொழி, இனத்தைக் காவாமல் அரசியலால்
    பொருளியலால் தமிழர் நலம் மூள்வதில்லை !
பழிவழியால் — கொள்ளையிடும் பதவிகளால் —
    நிலையான இனஉரிமை வாய்ப்பதுண்டா ?
வழியறியா ஏழையரை — எளியவரை
    வளைக்கின்ற கட்சிகளால் விளைந்ததென்ன ?
அழிவதன்முன் தமிழினமே ஒன்றிணைந்தே
    அழிம்புகளை எதிர்த்திடவே முனைகுவோமே !

குரல்வளையை நெரிக்கின்ற கொடுங்கருப்புச்
    சட்டங்களை ஆள்வோர்கள் வரைந்துகொண்டு
விரல்நுனியை நீட்டிடினும் வெஞ்சிறையில்
    தள்ளுகின்ற வல்லாட்சி காணுகின்றோம் !
வரலின்றி வீண்செலவால் பொருளியலும்
    நசிக்கையிலே வறுமையிங்கு நீங்கிப்போமோ ?
நிரல்நிரலாய் எழுச்சியுறு போராட்டம்
    ஆப்பாட்டம் நிகழ்த்தியிங்கு வெற்றிகாண்போம் !


சுவடி : 24
ஓலை : 5

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா:2-00


Scanned with CamScanner

# நமக்கு வந்த மடல்கள்.

O: *1293:* மொழியினக் காவலர் பேரன்புடைய ஐயா அவர்களுக்கு, எனக்குத் தாங்கள் அனுப்பிய பழைய 'தென்மொழி' இதழ்கள் நூறும் (இரண்டு கட்டுகள்) வந்து சேர்ந்து விட்டன. அவை வந்து சேர்ந்ததும்தான், தங்களுக்குச் சில நாள்களாக ஏற்பட்டிருக்கும், தொல்லைகளில், நானும் சேர்ந்து ஒரு பெரிய தொல்லையைக் கொடுத்திருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். அருள் கூர்ந்து பொறுத்தருளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது வந்துள்ள 'தமிழ் நிலம்' இதழ் கண்டு, செய்திகள் அறிந்தேன். தங்களைப் போல் தமிழ்த் தொண்டு செய்ய ஏந்துகள் இருந்தும் யாரும் முன்வராவிடினும், தொண்டு செய்து வருகிற தங்களுக்கு ஏற்படும் இன்னல்கள் கண்டு, நெஞ்சம் பதறுகிறது. தங்களின் தூய தொண்டுக்கு நாங்கள் என்றும் உறுதுணையாக இருப்போம். மனத்துயர் வேண்டா. தங்கள் பணி தொடரட்டும். தங்களன்புள்ள,

— இரா. இராமதாசன், புதுக்கோட்டை

O: *1294:* எம் நெஞ்சில் நிறைந்த பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு! ஈழத்துப் பெருவீரர், புலிக் கொடிகட்டுத் தலைவர், மான மறவர் தம்பி பிரபாகரன் எமது உள்ளத்தில் நிறைந்து இருக்கின்றார்.

வன்நெஞ்சன், வட ஆரியனின் வஞ்சகப் போக்கால் நாம் நாளும் கொதித்துக் கொண்டு இருக்கிறோம். தண்ணீரில் தத்தளிக்கும் எமக்கு நீங்கள் ஒரு கலமாக, கலங்கரை விளக்காகத் தென்படுகின்றீர்கள்.

'வளரும் தமிழ் உலகம்' என்னும் ஏட்டினில் தங்களைத் தாக்கி எழுதி இருப்பதனைப் படித்தேன். எனக்கு அடங்காச் சினம் வந்தது. 'வளரும் தமிழ் உலகம்' எனப் பெயர் வேறு வைத்துக் கொண்டு, தமிழுக்காகத் தமிழர்க்காகத் தம்மையே ஒப்படைத்துக் கொண்டுள்ள அடலேற்றினை, — எங்கள் பாவலரேறு ஐயா அவர்களைத் — தாக்கி எழுதி இருப்பதனைக் கண்டு உள்ளம் கொதித்தேன்.

இராசீவை அடைமொழி போட்டு எழுதி இருப்பதிலிருந்து தமிழின வஞ்சகர்களுக்குப் பாதம் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கிறது 'வளரும் தமிழ் உலகம்'. அதன் மூலம் அவ்விதழ் தமிழர்கள் அனைவர்க்கும் இரண்டகனாக நிற்கிறது. தங்கள் அன்புள்ள

வே. பாண்டியரசன், சென்னை - 7

O: *1285:* தோழமையுடையீர் வணக்கம். 22-5-88, அன்று நடந்த தமிழ்த் தேசிய இன மக்களின் வாழ்வுரிமை மாநாட்டில் தாங்கள் மிகவும் சிறப்பாகப் பேசினீர்கள். மிகவும் மகிழ்ச்சி,

இன்றைய இந்தியாவில் பார்ப்பனர்கள், பணக்காரர்கள், இந்தி வெறியர்கள், ஆகியோர் மற்ற தேசிய இன மக்களை வல்-

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ திருவனம் தி. பி. 1990 (1959) ]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி 24] ௨௦௧௯ விடை (மே-சூன்'88) [ஓலை 5

# தமிழின் பெயரால் அழிம்புகள்! அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அரசர் கொடுத்த சலுகைகள் விலைக்கு விற்கப் படுகின்றன! வேந்தர் ஆளுநர் இதைக் கவனிப்பாரா?



கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கல்வி வள்ளல் அண்ணாமலை அரசரால், தமிழ் வளர்ச்சிக் கென்றே சமைக்கப்பெற்ற பல்கலைக் கழகமே, இப்பொழுதுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்றால், அதற்கு ஐயமில்லை; ஆம் அப்பல்கலைக் கழகம் சென்ற ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ் இசை, தமிழ் ஆராய்ச்சி, தமிழ் வெளியீடுகள் இவற்றிற்குச் செய்துள்ள பணிகள் அளப்பரியன.

இதன் இணைவேந்தராக விருந்த அரச வயவர் திரு. முத்தைய வேள், ஐந்தாண்டுகளுக்கு முன், தம் இறுதிக் காலத்தில், அப் பொழுதைய துணைவேந்தராக விருந்த திரு. சிட்டுபாபுவிடம் கலந்து பேசித், தமிழ் இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளிலும் தொண்டு செய்த, செய்து வருகிற அறிஞர் பெருமக்களுக்கு, அவர்களின் அரிய தொண்டுக்கு நன்றியும் நயன்மையும் தருகிற வகையில், ஓர் ஏற்பாட்டை நிலையாகச் செய்தார். அதன் படி, அம் முத்தமிழ்த் தொண்டு செய்து வரும் அறிஞர்கள் பதினெண்மரை ஆண்டுதோறும், அப் பல்கலைக் கழக ஆளவை மன்ற (Senate) உறுப்பாண்மைக் குழு தெரிவு செய்து, அவர்களின் குடும்பங்களில் உள்ள தகுதியுள்ள பிள்ளைகளுக்கு அஃதாவது அவர்களின் மக்கள்—அவர்கள் இல்லாவிடில் அவர்களின் பெயரர்கள்—அவர்களும் இல்லாவிடில் அவர்களின் நெருங்கிய உறவினர் பிள்ளைகள்—ஆகியோரில் ஒவ்வொருவர்க்கும் உயர் கல்வித் துறைகளில் பயில்வதற்குப் பதினெட்டு இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று ஒரு நிலையான ஏற்பாட்டை ஒரு நெறியாக வகுத்திருந்தார்.

இதன்படி பல விடங்களில் பல்லாயிரக் கணக்கான உருபாக்களைக் கையூட்டாகக் கொடுத்து வாங்க வேண்டிய படிப்பு இடங்கள் என்று கருதப் பெறுகின்ற மருத்துவப் படிப்பு (M.B.B.S), பல் மருத்துவம் (B.D.S), பொறியல் (B.E.), உழவியல் (B.Agri) ஆகிய துறைகளில் கீழ்வருமாறு சேர்ப்பிடங்கள் சலுகையாக அவர்களுக்கென ஒதுக்கப் பெற்றுள்ளன.

பொறியல் (B.E) படிப்பில் ...... 10 இடங்கள்.
உழவியல் (B.Agri) ,, ...... 5 இடங்கள்.
மருத்துவயியல் (M.B.B.S) ,, ...... 2 இடங்கள்.
பல் மருத்துவம் (B.D.S) ,, ...... 1 இடம்.

இத்துறைகளில் இவ் வொதுக்கீடுகள் இல்லையானால் அவ்வறிஞர்களின் பிள்ளைகள் பிற செல்வக் குடும்பங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு அவ்வத் துறைப் படிப்பில் தாங்கள் விரும்பினாலும் சேர்ந்து படிப்பது இயலாமலே போய் விடும் என்பதும், அந்த நிலைக்கு அம் முத்தமிழ்க்குத் தொண்டு செய்யும் குடும்பங்கள் முன்னேறாமல் போய் விடக் கூடாது என்பதும், எனவே, அவர்களுக்கு இச் சலுகை ஏற்பாடு சிறந்தமுறையில் பயன்படும் என்பதும் அக் கல்வி வள்ளலின் அருட்கொடை ஏற்பாடாகும்.

இதன்படி அம் முத்தமிழ்த் தொண்டர்களின் பிள்ளைகள் இப் பிரிவுகளுக்கு வேண்டுகைப் படிவங்கள் அனுப்பும் பொழுது, அம் மாணவர்களின் பெற்றோர்கள், இயல், இசை, நாடகம், ஆகிய முத்தமிழ்த் துறைகளில் ஏதாவதொரு துறையில், தாங்கள் தொண்டாற்றி வருவதை மெய்ப்பிக்கும் வகையில் தக்க சான்றுகளை இணைக்க வேண்டும் என்பது நெறி. அல்லது அவரை

நன்கு தெரிந்த தமிழறிஞர் ஒருவரின் சான்றிதழைத் தக்க அடிப்படையுடன் இணைத்துப் பரிந்துரை செய்ய வேண்டும்.

இத் திட்டம் தொடங்கப் பெற்றது முதல் ஓரிரண்டு ஆண்டுகள் சரிவர நடந்து வந்தது. அதன் பின்னர் யார்யாரோ இத்திட்டத்தில், முத்தமிழ்த் தொண்டு செய்தவர் என்ற போர்வையில் இச் சலுகை ஒதுக்கீட்டைப் பயன்படுத்திக் கொண்டு விடுகின்றனர் என்று தெரிய வந்தது. இதனால் உண்மையாகவே முத்தமிழ்த் தொண்டு செய்த அறிஞர்களின் பிள்ளைகள் இடம் கிடைக்காமல் போயினர் என்பதும் தெரிய வந்தது. இந்நிலை,

1. உண்மையாகவே முத்தமிழ் அறிஞர்களுக்குச் சேர வேண்டிய சலுகையை, அவ்வாறல்லாத பிறர் பெற்று விடுவதால், கொடுமையானதும் (Cruel),

2. ஒருவர் வாய்ப்பை இன்னொருவர் தட்டிப் பறித்துக் கொள்வதால் ஏமாற்றும் (Foregery),

3. தக்கவர்க்குச் சேரவேண்டிய உரிமையைத் தக்கவர் அல்லாத ஓருவர் மறைமுகமாகத் திருடி, அவர் குடும்ப முன்னேற்றத்திற்கு ஊறு செய்வதால் குற்றவியல் (Criminal) சார்புடையதும், ஆகும்.

இவ்வாண்டும், முந்தைய ஓரிரண்டு ஆண்டுகளைப் போலவே, தமிழின் பெயரால் கடுமையான ஒரு தொடர் குற்றம் நடிக்கிறது என்பதையும், இத்திட்டம் முறையாகச் செயல் படுத்தப் படுவதில்லை என்பதையும் கேள்விப் பட்டு, உணர்ந்து வருந்திய, ஆளவை மன்ற உறுப்பினர் (Senate member) ஒருவர், கடந்த 31-3-88-ஆம் நாளன்று நடைபெற்ற ஆளவை மன்றக் கூட்டத்தில், 'இத் திட்டத்தால் இவ்வாண்டு பயன்பெறத் தேரப் பெற்ற முத்தமிழ்த் தொண்டர்கள் அல்லது அறிஞர்கள் யார் யார்?' என்பதாக ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்.

இப்பல்கலைக் கழக நெறிமுறைகளின் படி, மாணவர்களின் சேர்க்கைக்கு முழுப் பொறுப்பும் ஏற்கக் கடமைப் பட்டுள்ள இற்றைத் துணை வேந்தர் திரு. இராம. சேதுநாராயணன் முத்தமிழ்த் தொண்டு செய்த அறிஞர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ள இடங்களை இவ்வாண்டு பெற வேண்டியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற பதினெண்மர் பட்டியலை வெளியிட்டார். அப் பெயர்ப் பட்டியல் வருமாறு:

1. பர். ஔவை நடராசன்.
2. திரு. கி. வா சகந்நாதன்.
3. பேரா. மு. அருணசலம், திருச்சிற்றம்பலம்
4. திரு. மீ. ப. சோமசுந்தரம்.
5. பர். சீர்காழி கோவிந்தராசன்.
6. மா. பொ. சிவஞானம்.
7. பேரா. லெ. ப. கரு. இராமநாதன்.

8. திருக்குறள் வி. முனிசாமி.
9. திரு. எரான் இராமசாமி.
10. பேரா. எசு. இராசேந்திரன்.
11. திரு. குமரி. அனந்தன்.
12. பேரா. மு. அருணசலம்.
(முன்னாள் இணைப் பேராசிரியர்)
13. திரு. ப. நெடுமாறன்.
14. பர். ஏ. என். பெருமாள்.
15. பேரா. எசு. வி. பார்த்தசாரதி.
16. பேரா. எம். சுந்தரம்.
17. கலைமாமணி. வி. சோமசுந்தரம்.
18. கலைமாமணி. கே. பி. கிட்டப்பா.

இப் பட்டியலில் உள்ள முத்தமிழ்த் தொண்டு செய்த அறிஞர்களின் பெயர்களைக் கவனித்துப் பார்க்கையில், இவர்களின் பிள்ளைகளோ, அல்லது மக்கள்வழிப் பிள்ளைகளோ மேற்கண்ட படிப்புகளில் படிக்கவில்லை என்று திட்டமாகத் தெரிகிறது. மேலும் அவர்கள் வேறு முத்தமிழ்த் தொண்டு செய்தவர்கள் யாருக்காவது பரிந்துரை செய்தார்களா என்று ஆராய்ந்த பொழுது அப்படிச் செய்யப்பட்ட பரிந்துரைகளும் ஐயப்பாட்டை விளைவித்தன. அவர்களில் பலரையும் அணுகி உசாவிய பொழுது, அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட 1987-88-ஆம் ஆண்டில், தாங்கள் பல்கலைக் கழகம் சொல்லியதற்கேற்ப எந்த இடமும் பெறவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர். தமிழுக்குத் தொண்டு செய்தவர்களுக்கு இடம் கொடுத்துள்ளோம் என்று கூறுகின்ற வகையில், துணைவேந்தர் திரு. இராம. சேதுநாராயணன் அவர்கள் தாம் ஏமாற்றுச் செய்துள்ளார் என்பதற்குத் தக்க அடிப்படைச் சான்றுகள் நம் கைக்குக் கிடைத்துள்ளன.

எனவே, இவ்வகையில் ஆட்சிக் குழு, ஆளவைக்குழு பொதுமக்கள் ஆகியோருக்குத் தவறான செய்திகள் தந்துள்ள, நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு விட்ட துணைவேந்தர் திரு. இராம. சேதுநாராயணன் மிகப் பெரிய குற்றவியல், ஆள்மாறாட்டம் ஏமாற்று போன்ற தண்டனைகளுக்கு ஆளாவதால் அவர் உடனடியாகத் தம் பதவியினின்று விலகி விடுவதே அவருக்கு நல்லதாகும். மேலும் பல்கலைக் கழக ஆளவை மன்றத்தில் மேதகு ஆளுநர் அவர்களும் ஓர் உறுப்பினர். ஆகவே ஆளுநர் உறுப்பினராக உள்ள ஆளவை மன்றத்திற்கு இந்தத் துணைவேந்தர் தவறான தகவலையும் பொய்ப் பட்டியலையும் தந்துள்ள குற்றத்திற்கும் ஆளாகின்றார். எனவே, இந்தக் குற்றங்கள் அடிப்படையில் மேதகு ஆளுநர் அவர்கள் இப்பொழுதுள்ள இந்தக் குற்றங்களுக்கு ஆளாகியுள்ள — துணைவேந்தர் திரு. இராம. சேது நாராயணன் அவர்களைப் பதவி நீக்கம் செய்வதுடன், இனி வரும் ஆண்டிலிருந்தாகிலும் இப்படிப் பட்ட குற்றங்கள் நேர்ந்து விடாதவாறு ஆளுநர் கண்

காணிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் வரும் கல்வி ஆண்டிற்குள் இக் குற்றஞ் சாட்டப்பெற்ற துணைவேந்தர் இக் குற்றத்தின் அடிப்படையில் நீங்கவோ, அல்லது நீக்கம் பெறவோ இல்லாவிடில், இவருக்குப் பல்கலைக் கழகத்தில் எந்தப் பிரிவிற்கும் மாணவர்களைச் சேர்க்கும் அதிகாரத்தை வழங்கக் கூடாது என்று கட்டளையாகிலும் பிறப்பிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

இதனைத் தமிழ்மக்கள் அனைவரின் ஒருமித்த ஒரே முறையாகக் கொள்ள வேண்டும்.

இவ்வேண்டுகோள் நல்ல முறையில் வலிவு பெறுமாறும் உடனடியாகச் செயல்படுமாறும் இதைக் கண்ணுறும் தென்மொழி அன்பர்களும் அனைத்துத் தமிழ் அமைப்புகளும், அறிஞர் பெருமக்கள் பிறரும், கீழ்க் காணும்படி, ஒவ்வொருவரும் ஓர் அஞ்சலட்டையில் எழுதி, உடனே, 'மேதகு' ஆளுநர் தமிழ்நாடு அரசு, கிண்டி, சென்னை. 22 என்னும் முகவரிக்கு விடுத்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

''மேதகு ஆளுநர் அவர்களே,

வணக்கம். 1987-88-ஆம் ஆண்டிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முத்தமிழ்த் தொண்டிற்குப் பணிபுரிந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில், அப்பணி புரியாதவர்களுக்கு இடம் அளித்துத் துணைவேந்தர் ஒரு பொய்ப் பட்டியலை வெளியிட்டுத் தமிழின் பெயரால் ஏமாற்றுச் செய்துள்ளார். எனவே, அவரை உடடியாகப் பதவியில் இருந்து நீக்க வேண்டுகிறோம்.

நாள் : (ஒப்பம்)
இடம் : (முகவரி)

— என்று எழுதிக் கையெழுத்திட்டு அனுப்பவும். ஆயிரக் கணக்கான அஞ்சலட்டைகள் இன்றே அனுப்பப் பட வேண்டும்.

இனி, இந்த நாட்டில் தமிழின் பெயரால் எவரும் வாணிகம் நடத்தக் கூடாது என்பதற்கு இஃது ஒரு கடைசிக் கழிசடைச் செயலாக இருக்கட்டும்.

---



# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
கொள்கைகள் அடங்கிய கிழமை இதழ்.

| | | | |
|---|---|---|---|
| தனியிதழ் | விலை | உரு. | 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | ,, | ,, | 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | ,, | ,, | 25-00 |

தொடர்புக்கு : தமிழ்நிலம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5

முன்னிதழ்த் தொடர்ச்சி 1.

# தமிழரசன் தம்பிகளுக்கு! - 2.

இனி, தனித் தமிழ் நாட்டு விடுதலை என்பதை வெறும் அரசியல் விடுதலையாக மட்டுமே இளைஞர்கள் கருதிக் கொள்ளக் கூடாது. இது வெறும் அரசியல் விடுதலை மட்டுந்தான் என்றால், இப்பொழுதுள்ள இந்திய அரசியல் சட்டதிட்டங்களுக்குட்பட்டே தமிழக ஆட்சியை மட்டுமே நாம் அடைந்து விட்டால் போதும்; நம் இனத்தையும், நாட்டையும் மொழியையும் நாம் முன்னேற்றி விடலாம்' என்று கருதுகிற அளவில் நம் கொள்கை நிறைவு பெற்று விட முடியும்; முழுவதுமாக இல்லையேனும் ஓரளவாவது தொடக்கத்திலும், பின்னர் படிப்படியாக முழுமையும் நம் இலக்கை அடைந்து விடலாம் என்று நம் அரசியல்காரர்கள் சிலர் கருதி முயன்று வருவதை நாம் அறிவோம். அவ்வளவில், அவர்கள் அரசியல் வழிப் போராட்டமே - முயற்சியே —போதும் என்று கருதி, அதற்குத் தேர்தலே வழி என்றும் கூறி வருகிறார்கள்.

தேர்தல் என்பது ஒரு நல்ல அரசியல் அதிகார மாற்றுக் கருவிதான். அக் கருவி கையாளப் பெறுபவர்களின் கைகளுக்கேற்ப பெருமை பெறுகிறது; அல்லது இழிவடைகிறது. இந் நாட்டைப் பொறுத்த வரையில் அது பட்டிருக்கிற இழிவுக்கு — அல்லது தாழ்ச்சிக்கு — எல்லையே இல்லை எனினும், அதன் வழியாகத்தான் அதிகாரங்கள் கை மாற வேண்டி உள்ளது. என்ன செய்வது? எனவே, அரசியல் அதிகார மாற்றத்தை இதன் வழியாகச் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவர்கள், இத்தேர்தலை நம்ப வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். இப்படி இருப்பவர்கள், இக் கருவி எந்த அளவுக்கு இழிவு படுத்தப்பட்டுக் கிடக்கிறதோ, அந்த அளவுக்குத் தாங்களும் கீழிறங்கி விடுகிறார்கள். அவர்களில் மிக மிகக் கீழிறங்கி நடப்பவர்களே வெற்றியும் பெறுகிறார்கள். எனவே இந்த வகையான அரசியல் விடுதலையால், இத்தமிழையும் தமிழ் நாட்டையும், தமிழினத்தையும் எவராலும் முன்னேறச் செய்து விட முடியாது. அவ்வாறு நினைத்துக் கொண்டிருப்பவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளும் பேதைகள்! வேண்டுமானால் அறிவறிந்த பேதைகளாக இருக்கலாம்! அதே போல் அவ்வாறு பேசிக் கொண்டிருப்பவர்கள் மக்களை ஏமாற்றும் எத்தர்கள்! வேண்டுமானால் படித்த எத்தர்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். எனவே இப்படிப்பட்ட நிலைகளிலேயே ஈடுபட்டு ஈடுபட்டுக் காலக்கழிவு செய்பவர்களால் உண்மையான அரசியல் விடுதலையைப் பெற்றுத்தர முடியாது. அவ்வாறு பெற்றுத் தந்தாலும் அஃது அரசியல் விடுதலை ஆகாது. இந்தியாவுக்குக் கிடைத்த விடுதலையும் இதை — அல்லது இதை விடக் கீழான ஒரு நிலையைப் போன்றதே என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

Scanned with CamScanner

இனி, இதுபோன்றதொரு விடுதலையல்லாமல், உண்மையான தேர்தல் வழி, முறையான செயல்முறைகளுடன் நேர்மையான வகையிலேயே, நம் தமிழ்நாட்டுக்கு அரசியல் விடுதலையே கிடைத்தாலும் அதால் இந்த மொழியும், இனமும், நாடும் முன்னேறி விட முடியாது. ஏனெனில், தில்லி ஆண்டை தமிழக அரசியல் விடுதலையை எப்பொழுதுமே தன் கையசைவுக்குள்தான் அடக்கி வைத்திருக்க முடியும். அப்படித்தான் இந்நாட்டு அரசியல் அமைப்பியல் சட்டம் உருவாக்கம் செய்யப் பெற்று இருக்கிறது. (ஒருவேளை தில்லி, தமிழகத்திற்கென்று தனி இறைமையும் தன்னதிகாரமும் உள்ளே விடுதலையையே கொடுத்துத் தனித் தமிழ்நாடு ஆக்கினாலும், இப்பொழுதைய நிலையில் மூப்பனும், சிதம்பரமும், பழனியாண்டியும் போன்றவர்கள்தாம் இதன் அரசியல் தலைமையைக் கைப்பற்றுவார்கள். அதால் மக்களுக்கு எந்த விடிவோ முன்னேற்றமோ வந்து விடாது.) எனவே. தில்லியாட்சியிலிருந்து, அறவே விலகி, மக்களரசு அமைக்கும் ஒன்றைத்தான், நாம் இப்பொழுதைக்கு அரசியல் விடுதலை என்று சொல்ல முடியும். இதை மேலும் தீவிரமான இலக்கண முறையோடு ஆராய்ந்து, இலக்கிய விளைவோடு ஒத்திட்டுப் பார்க்க வேண்டிய நிலை இப்பொழுது தேவையில்லை என்பதால் இத்துடன் இதை நிறுத்திக் கொண்டு, இவ் வரசியல் விடுதலைக்கு அப்பால், முதலில் எவ்வெவ் வகையில் நாம் விடுதலை பெறவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதுபற்றி இனிச் சிந்திப்போம்.

தமிழினத்தைப் பொறுத்த வரையில், உலகிலுள்ள பிற தேசிய இனங்களைப் போல் வெறும் அரசியல் விடுதலை மட்டுமே இதற்குப் போதுமான தேவையன்று. அரசியல் விடுதலையுடன் கூடிய இனவிடுதலையும் இதற்குக் கட்டாயம் தேவை என்பதையும் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

சிலர் இதன் பரு விளக்கத்தைத் தவறாக விளங்கிக் கொண்டு, 'அரசியல் விடுதலை பெறுவதுதான் நம் முதல் தொண்டு ; அதைப் பெற்று விட்டால், இன விடுதலையையும் பிற விடுதலைகளையும் நமக்கு நாமே வழங்கிக் கொள்ள முடியும்' என்று கருதுகின்றனர். அவர்கள் நிலமிருந்தால் நாமே விளைவித்துக் கொள்ள முடியும் என்று கருத்தை உடையவர்கள். நிலமிருந்து விட்டால் மட்டும் போதும், நாமே விளைவித்துக் கொள்ள முடியும் என்பது ஒரு பொது உண்மையே ! ஆனால் அது சிறப்பு உண்மையாக முடியாது. நிலத்திற்கு மேலும் எத்தனையோ உடைமைகளையும் உரிமைகளையும் நாம் பெற வேண்டிப் பாடுபட வேண்டியிருக்கும்.

அரசியல் விடுதலை பெற்று இனவிடுதலை பெறாதபொழுது, இற்றை இந்தியா தன்னுரிமை பெற்ற வரலாறாகத்தான் அது முடியும். இந்தியாவின் நாற்பதாண்டுக்காலத் தன்னுரிமை வரலாற்றில் மக்கள் படுந்துயரையும், இழந்த உரிமைகளையும் எவரே எடுத்து முழுமையாக இயம்பி விட முடியும் ? இதைவிட தமிழ்

Scanned with CamScanner

நாடு இன விடுதலை பெறாமல் அரசியல் விடுதலை மட்டும் பெற்று இயங்குவது கொடுமையினும் கொடுமையாக இருக்குமன்றோ ?

நாம் இனவிடுதலை என்று குறிப்பது தமிழினத்தில் ஏற்கனவே இரண்டறக் கலக்கப் பட்டுள்ள மதப்பூசல்களையும் சாதி வேறுபாடுகளையும் — அறவே விட்டு விலகி இன ஒருமை எய்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதுதான். நாடு அரசியல் விடுதலை பெற்றுத் தன்னுரிமை உற்று இருக்கையில், மக்கள் பிறவியின் அடிப்படையில் வேறுபட்டுக் கிடப்பாரானால், அவ்வுரிமையை நாம் எப்படிச் சரி சமமாகப் பகிர்ந்து கொள்ள இயலும் ? உரிமை சரிசமமாக மக்களால் நுகரப் பெறாத பொழுது, நாட்டின் அரசியல் விடுதலையால் யாருக்கு என்ன பயன் விளையும் என்று எண்ணிப் பார்க்கவும்.

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்லாமல் இந்தியாவிலுள்ள மக்கள் அனைவருமே பல்வேறு மதவுணர்வுகளாலும், பல நூற்றுக் கணக்கான சாதி உணர்வுகளாலும் ஆண்டாண்டுக் காலமாகப் பிளவுண்டு, பிரித்து வைக்கப் பெற்றுள்ளனர் என்பதை நாம் அறிவோம். இங்கு ஆளும் சாதியென்று ஒன்றுண்டு ; ஆளப்படுகிற பல்வேறு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகள் எனப் பற்பலவுண்டு. இவையெல்லாம் அப்படி அப்படியே இருக்க, அரசியலில் மட்டும் விடுதலை பெற்றுவிட்டதாகவும், உரிமை எய்திவிட்டதாகவும் கருதிக் கொண்டு, அதன்படி சட்டத்தில் மட்டும், "நாமெல்லாரும் சமம், நாம் அனைவரும் இந்நாட்டு மன்னர்" என்று எழுதி வைத்துக் கொண்டு, செயல்களில் மட்டும் அவரவர் சாதி மதங்களுக்கேற்பப் போராடிக் கொண்டும் சண்டையிட்டுக் கொண்டும் வேறுபாடுகளைக் கற்பித்துக் கொண்டும், அதற்கேற்ப வளங்களை ஒருசார்பாகவே பங்குபோட்டுக் கொண்டும் இருப்பதால் யாருக்கு என்ன பொதுப் பயன் விளைந்து விட்டது, இந்த இந்தியாவில் ? எனவே, நாளை தமிழ்நாடும் அரசியல் உரிமை பெற்றால், இதே நிலைதான் தொடர்ந்து இருக்க முடியும் ? இராதென்பது எப்படி ? அதற்கென்ன உறுதி ?

ஆனாலும், அரசியல் விடுதலை பெற்று விட்டால்தான் நாம் இன வேறுபாடுகளைக் களைந்து கொள்ள முடியும் என்பதும், இன விடுதலை பெற்ற பின்னரே அரசியல் விடுதலை பெற்றுக் கொள்ளலாம் என்பது இயலவே இயலாது என்பதும் நாம் அறிந்தனவே ! ஆனால், இனவேறுபாடுகளையும், மற்ற பொருள் நிலை வேறுபாடுகளையும், களைந்து கொள்ள விரும்புகின்ற அளவில் மக்கள் பெரும்பாலாரின் மனம் பக்குவப் பட்டு வருகின்ற அல்லது பக்குவப் பட்டு விட்ட அந்த நிலையில்தான் அரசியல் விடுதலைக்கும் நாம் முயற்சி செய்தல் வேண்டும்.

அடுத்து, இங்குள்ள பொருளியல் ஏற்றத் தாழ்வுகளும் கூட நாம் இரண்டாவதாகக் குறிப்பிட்ட மதச்சேற்றுடனும் சாதிக் குப்பைகளுடனும் இரண்டறக் கலந்து, ஆழமாகப் பதிந்து கிடக்

கின்றதை நாம் உணர முடியும். இவற்றிலிருந்து நாம் விரும்பும் பொருளியல் விடுதலையை மீட்டெடுக்க வேண்டுமானாலும் அம் மத இழிவு நிலைகளையும் மூட நம்பிக்கைகளையும் சாதிச் சேற்றை-யும் நாம் கழுவித் துப்புரவு செய்தே ஆக வேண்டும். அப்பொழுது தான், நாம் விரும்பும் பொருளியல் விடுதலையையும் உரிமைகளை யும் மக்கள் சமமாகத் துய்க்க முடியும். பிறவியால் சிதறுண்டு கிடக்கும் இனவேறுபாடுகளையும், மத மூட நம்பிக்கைகளையும் அகற்றாமல் அரசியல் உரிமைகளைத் துய்க்கக் கொடுப்பது ஈயம் பூசாத பித்தளை யேனத்தில் பெய்யப் பெற்ற களிம்பு உணவை உண்ண வைப்பது போன்றது. அதில் களிம்பு போன்ற நச்சுணர்வுகள் ஊறிக் கொண்டே இருக்கும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. புண்ணின் உள்ளே கருவியிட்டு அங்கு ஊறிக் கொண்டிருக்கும் சீழ் அப்படியே இருக்கும் பொழுது வெறுமனே மேல் மருந்து பூசி உடலை நலப்படுத்துவது யாங்கன் இயலும்?

எனவே, மக்களுக்கு ஓரளவேனும் பொதுமை உணர்வையும் பொதுவுடைமைச் சமநிலை வேட்கையையும் ஊட்டி, உணர்த்தி, விளக்கப் படுத்தாமல், அரசியல் உரிமையை மீட்டுக் கொடுக்க முயற்சி செய்வது, என்றோ எங்கோ எப்பொழுதோ செய்யத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் விருந்துக் கென, இப்பொழுதே இங்கேயே இலை விரித்து வைக்கும் பொருத்தமற்ற செயலாகவே போய் விடும் என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எனவே, தமிழ்நாட்டு விடுதலைக்கெனத் தங்களை ஈகப் படுத்திக் கொள்ள விரும்பும் இளைஞர்கள், முதலில் தாங்கள் மீட்டெடுக்க விரும்பும் விடுதலை எந்த இன மக்களுக்காக என்பதையும், அவர்களின் இப்பொழுதைய அரசியல், இனவியல், பொருளியல் விழிப்புணர்ச்சி எத்தகையது, எந்த அளவினது என்பதையும் அடியூன்ற எண்ணிப் பார்த்து, அதற்குத் தக நம் விடுதலை முயற்சிகளைப் பல்வேறு கட்டங்களாகப் பகுத்து அளவிட்டுக் கொண்டு, முதல் கட்டம், இரண்டாவது கட்டம், மூன்றாவது நான்காவது கட்டங்கள் என்று வரையறை செய்து கொண்டு, அவற்றுக்குத் தகுந்தாற் போல், தங்கள் இயக்க ஆற்றல், துணையாற்றல், பொருள் நிலை ஆற்றல், கருவிநிலையாற்றல் ஆகியவற்றை எடையிட்டுப் பார்த்து, அவற்றை வளர்த்துக் கொண்டு, செயல் கட்டங்களுக்கு ஏற்ப அதைச் செயல் படுத்துவதே திட்டமிட்ட, கட்டுக் கோப்பான, வரைமுறையான விடுதலை முயற்சி யாகும் என்று நாம் கருதுகின்றோம்.

இனி, விடுதலை முயற்சி அதன் செயல் கட்டங்களுக்கு ஏற்ப எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதைப் பற்றியும், எதன் அடிப்படையில் வெளிப்படல் வேண்டும் என்பதையும், அம் முயற்சி-களுக்கு, நம் நாட்டைப் பொறுத்த அளவில், நம் மக்களைப் பொறுத்த அளவில் நாம் செய்யவிருக்கும் உரிமைப் போராட்டம் மக்கள் புரட்சியாக இருக்குமா, அல்லது கருவிப் போராட்டமாக இருக்க வேண்டுமா, எது சரி என்பன பற்றியும் அடுத்து வரும் கட்டுரையில் விளக்கமாகப் பேசுவோம்.

—(தொடரும்.)

# தமிழைக் கலப்புத் தமிழாக்கி நிற்கும் இருபத்தாறு அயன்மொழிகளும் சில, பல எடுத்துக் காட்டுச் சொற்களும்!

1. அரபி, 2. ஆங்கிலம். 3. இந்தி, 4. இந்துஸ்தானி, 5. இலத்தீன், 6. ஸ்பானிஷ், 7. ஹீப்ரு, 8. உருது, 9. கன்னடம், 10. சமசுக்கிருதம், 11. சிங்களம், 12. சிரியக், 13. டச்சு, 14. தெலுங்கு, 15. துருக்கி, 16. பஞ்சாபி, 17. பாலி, 18. பிரஞ்சு, 19. பிராகிருதம், 20. பிரேஜிலியன், 21. பெர்ஷியன், 22. போர்த்துக்கீசியம், 23. மராத்தி, 24. மலையாளம், 25. மலாய், 26. சப்பான்.

## எடுத்துக் காட்டுகள்!

**1. அரபிச்சொற்கள்:**

அடாவடி, அமீனு, அல்வா, அனுமத்து, இனும், இலாக்கா, உருது, கசர், காயிலா, குஜிலி, சுக்கான், தகவல், தணிக்கை, தபலா, தாவா, நக்கல், நகல், பதில், பனியன். மக்கார், மகஜர், மகசூல், மராமத்து, மல்(துணி), மல்கோவா, மகசூல், மாமூல், மாலிஷ், மிட்டாய், முகாம், முரப்பா, முன்சீப், ரத்து, ரஜா, லாயக்கு, லாயம், வக்காலத்து, வக்கீல், வாய்தா, வாரிசு, ஜப்தி, ஜப்ர்தஸ்து, ஜமா, ஜாபிதா, ஜிப்பா, ஜில்லா, ஷரத்து — முதலியன.

**2. ஆங்கிலச் சொற்கள்:**

அபேஸ், அர்த்தால், அரிக்கேன், அலுமினியம், ஆப்பிள், ஆர்மோனியம், ஆரஞ்சு, ஆஸ்பத்திரி, ஈரங்கி, உயில், ஏக்கர், ஓசி, காப்பி, கேடி, சம்மன், சாக்கு, சிமெண்ட், டஜன், டம்ளர், டிக்கட், டீ, தார், துருப்பு, பட்டன், பாட்டில், பாடி, பிடில், புனல், பெட்டி(க் கடை), பெஞ்ச், பெனுயில், பேரி(க்காய்), பேனு, பைபிள், மணிலா(க் கொட்டை), மைக்கா, வார்னிஷ், ஜாக்கி, ஜாக்கெட், ஜீப், ஜோக், எக்ஸ்ரே, காபரே, குடோன், சலூன், சாக்லேட், சாப்ஸ், சூப், டம்மி, பன், பிஸ்கோத் — முதலியன.

**3. இந்திச் சொற்கள்:**

கோந்து, கோணி, சட்னி, சிமிக்கி, செலான், சொஜ்ஜி, ஜோடனை, சோதா, டப்பா, டப்பி, டேரா, டோபி, தம்பிடி, பல்டி, மிட்டா, முண்டாசு, — மோட்டா, ரவை, ரொட்டி, லத்தி(குறுந்தடி), லேவாதேவி, ஜகா, ஜாடி, ஜாலரா, ஜிமிக்கி, ஜோடி, ஜோடிப்பு, ஜோடு, ஹர்த்தால் — முதலியன.

**4. இந்துஸ்தானிச் சொற்கள்:**

அண்டா, சமுக்காளம், சவுக்காரம், பக்கோடா, லகான், லங்கோடு, லடாய், லவடா(ஆண்குறி), லூட்டி, — முதலியன.

5. இலத்தீனம்: ரோஜா — முதலியன;

6. ஸ்பானிஷ்: சப்போட்டா — முதலியன;

7. ஹீப்ரு: ஆதாம் — முதலியன.

8. உருது: அக்கப்போர், அசல், அத்து, அஸ்திவாரம், அமுல், அலாதி, ஆசாமி, ஆஜர், இஸ்திரி, உருமால், ஊதா, ஐவேசி, கச்சேரி, ஃசகசா, கசாப்பு, கடிதாசி, கதர், கப்சா, கலாய், கஜூர், கஜானு, கசரத், காதி, காபந்து, காலி, கித்தான், கிராம்பு, கிருதா, குமாஸ்தா, குல்லா, குறுமா, குஷி, குஸ்தி, கூஜா, கெஜம், கைதி, கொப்பரை, கோரி, கோஷா, சக்கிமுக்கி, சந்தா, சயித்தான், சூர்க்கா, சர்க்கார், சர்பத்து, சல்லிசு, சலாம், சவ்வரிசி, சவ்வாது, சவடால், சவரம், சவாரி, சவால், சவுக்கு, சாத்தான், சாத்துக்குடி, சாதா, சாப்பா, சால்வை, சாலேசரம், சிட்டா, சிப்பந்தி, சிபாரிசு, சீசா, சீட்டு, செலாவாணி, ஷோக்கு, சௌடால், டப்பாசு, தபால், தம்புரு, தமாஷ், தமுக்கு, தயார், தாணு, தராசு, தவில், தாக்கல், தாஜா, தாசில்தார், தாயத்து, தாலுக்கா, திவால், தினுசு, தேக்சா, தொப்பி, தோட்டா, தோலா, தம், நகாசு, நபர், நபி, நவாப், நாசூக்கு, நிஜார், பக்கா, பங்களா, பசலி, பஜாரி, பட்டி, பட்டுவாடா, படவா, படுதா, பயில்வான், பர்பி, பாக்கி, பாரா, பிச்சுவா, பிராது, பினுமி, பீடி, பூந்தி, பூரா, பூரி, பேக்கு, பேசரி, பேட்டி, பேஷ், பைசல், போனி, போதை, மகமை, மகால், மசாலா, மசூதி, மசோதா, மத்தாப்பு, மாகாணம், மாஞ்சா, மாலுமி, மாஜி, மிராசு, முண்டா, மைதா, மைதானம், மைனு, மவுசு, ராஜிநாமா ராட்டினம் ராட்டை ராத்தல் ராத்திரி ருசு ரேக்கு லாடம் லோட்டா லோலாக்கு வகையறு வசூல் வாபஸ் ஜமாய் ஜரூர் ஜல்தி ஜாகை ஜிகினு ஜீரா ஜேப்பி ஷராப் ஷராய் கோதா தோடி பாயா கிராக்கி — முதலியன;

9. கன்னடம்: தண்டால், ரகளை — முதலியன;

10. சமசுக்கிருதம்:

அக்கிரமம் அக்னி அசரீரி அமோகம் அர்ச்சனை அர்த்தம் அவகாசம் அவயவம் அனுஜ்ஞை அனுபவம் ஆபாசம் ஆயுதம் ஆயுள் இங்கிதம் உலோகம் ஊதாரி காரியம் காமாலை கிராமம் கேலி சமாதி சாத்தியம் சாணை ஜாதகம் சிகை சிகரம் சிகிச்சை சிங்கம் சிசு சுருதி தனியா தர்மம் தானியம் திதி திரவம் தியானம் தியாகி திராவிடம் திரி தீட்சை தீபம் தீர்த்தம் தீரம் தீவனம் துக்கம் துப்பட்டி நகம் நமன் நரகம் நவீனம் நாசி நாமம் நாரி நாவிதன் நிகண்டு நிசி நிதானம் நிந்தனை நிந்தை நிபந்தனை நியாயம் நிர்ப்பந்தம் நிர்வாகம் நிரந்தரம் நிரபராதி நிருபர் நிஜம் நிதி நீதி நூதனம் பக்குவம் பசு பட்சணம் பட்சி படாடோபம் பதார்த்தம் பந்து பலகாரம் பாத்திரம் பாதரசம் பானம் பிங்கலம் பிச்சை பித்தளை பிரகடனம் பிரகாசம் பிரகாரம் பிரச்சனை பிரசவம் பிரசுரம் பிரதி பிரபஞ்சம் பிரபு பிரமா-

தம் பிரளயம் பிராணி பிரியம் பீடம் பூமி பூர்த்தி பூர்வம் மகராசி யுகம் யுத்தம் யுவதி ரஸ்தாளி ரவேஸ் விபத்து விநாடி விபூதி விதவை விதம் வித்தை விமானம் விமோசனம் வியாக்கி-யானம் வியாசம் வியாதி வியாபாரம் வியூகம் விரக்தி விரதம் விருத்தி விருது விரோதம் ஜடம் — முதலியன.

11. சிங்களம்: பில்லி — முதலியன.

12. சிரியக்: சிலுவை — முதலியன.

13. டச்சு: கக்கூஷ், துட்டு, பம்ளிமாஸ் — முதலியன.

14. தெலுங்கு: உப்பசம் கட்டாரி கபோதி கிலி கொலுசு கோசரம் சந்தடி சிப்பம் சொக்காய் திமிசு பிகுவு பிசுநாறி பிலுக்கு புருடால் பேட்டு பொக்கிஷம் மகிடி லாகிரி ஜட்டி ஜாஸ்தி ஜோலி சொண்டி — முதலியன.

15. துருக்கி: பில்லாக்கு — முதலியன.

16. பஞ்சாபி: சேமியா, சோளி — முதலியன.

17. பாலி: வீசம் முதலியன.

18. பிரஞ்சு: குசினி பட்டாளம் பீரோ ரோந்து லாந்தர் முதலியன.

19. பிராகிருதம்: கசாயம் காவு சவுக்கம்(சதுரம்) சுங்கம் ஞானம் தம்பம் பிட்சு வித்தாரம் சாமி — முதலியன.

20. பிரேஜிலியன்: கொய்யா — முதலியன.

21. பெர்சியன்: அக்ரூட் இந்து கம்மி கல்லா காக்கி கிஸ்தி தத்தாரி தர்பார் பராரி (பறங்கியன்) வஸ்தாது குல்கந்து சக்கு-பந்தி சுமார் செஞ்சி (போர்க்களம்) சேணம் தரப்பு நமூனு பஜார் பாதாம் பீங்கான் பேஜார் பைஜாமா மஜா மோர்சிங்கு ரசீது ரஸ்தா (உ)ருமால் லுங்கி ஜமீன் ஜரிகை ஜவான் ஜோர் ஷோக்கு ஹமாம் ஹுக்கா — முதலியன.

22. போர்த்துக்கீசியம்: அலமாரி அன்னாசி ஏலம் கொரடா கோப்பை சப்பாத்து சாவி பீப்பாய் பீரங்கி புதினு மேஜை மேஸ்திரி வராண்டா ஜன்னல் — முதலியன.

23 மராத்தி: அபாண்டம் உக்கிராணம் காகிதம் காமாட்டி கிச்சடி கில்லாடி கெண்டி கேசரி சாவடி சீட்டி சுதாரித்தல் பகாளாபாத் பட்டாணி பேட்டை பேட்டு லாகு லாவணி வில்லங்கம் ஜம்பம் — முதலியன.

24. மலையாளம்: சாயா — முதலியன

25. மலாய்: பப்பாளி — முதலியன.

26. சப்பானியம்: ரிக்ஷா — முதலியன.

(அடிப்படை: சொல்லாய்வறிஞர் அருளியின் 'இவை தமிழல்ல' நூல்.)

பட்டியல் : 11.

# தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகள்!

தென்மொழி சுவடி 20, ஓலை 5-6 -இல் வெளியிடப்பெற்ற அறிக்கையின் படி தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகளுக்குத் துணையாக நின்றுதவிய அன்பர்களின் பெயர்ப் பட்டியல் கீழே கொடுக்கப் பெறுகின்றது. (18-7-87 முதல் 30-4-88 வரை).

1. வாழ்நாள் உறுப்பினர்கள் :

தென்மொழி :

| | | உருபா. |
|---|---|---|
| 37. | சி.சா. கருப்பையா பார்த்திபனூர். | 250.00 |
| 38. | இரா. பாலகங்காதரன், திருச்சி-12. | 300.00 |
| 39. | வே. அரங்கசாமி, சிவகங்கை | 200.00 |
| 40. | அரு. கத்தூரி, பள்ளத்தூர் | 300.00 |

தமிழ்ச்சிட்டு:

| | | |
|---|---|---|
| 24. | இரா. பாலகங்காதரன், திருச்சி. 12 | 150.00 |
| 25. | சி. புகழ்வேந்தன், சென்னை-82 | 150.00 |

2. பத்து உறுப்பினர்கள் சேர்ந்த பயனுறு தொண்டுள்ளப் பேராளர்கள் :

தென்மொழி :

| | | |
|---|---|---|
| 12. | நா. ஆண்டாள் திருமாறன், நெய்வேலி 20×12.) | 240.00 |

தமிழ்ச்சிட்டு :

| | | |
|---|---|---|
| 24. | ம. செயராமன், வாழைப்பாடி. 25×9 | 225.00 |
| 25. | ஞா. அந்தோனிராசு, சவுந்தரவல்லி) பாளையம் 12×9) | 108.00 |

3. நன்கொடை நல்கிய நல்லருளாளர்கள் : (18-7-87 முதல் 30-4-88 வரை)

| | | |
|---|---|---|
| 1. | க. பழனியப்பன், திருச்சி.(ஆகத்து நன்கொடை) | 30.00 |
| 2. | சு. தனபாலன், நியூபாப்பே. | 15.50 |
| 3. | அரசத்தொகையன், சென்னை.) (ஆகத்து நன்கொடை) | 50.00 |
| 4. | அருள்மணி, பெங்களூர். | 30.00 |
| 5. | திருவாணன், கற்கோயில். | 30.00 |
| 6. | கோபி, பேரா. அரங்கச் செல்வனார் (6-11-84 — அன்று மறைந்த மகன் அறிவரசின் 13-ஆம் ஆண்டுப் பிறந்தநாள் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு) | 100.00 |

7. (ஆசிரியர் மேல் அன்பும் அக்கறையும் கொண்டு

87 சனவரி முதல் கரூர், மருத்துவர் சி. இராமச்சந்திரன் அவர்கள் ஆசிரியர் உடல்நலத்திற்கென மூன்று முறையாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை உரு 20/- மதிப்புள்ள ஒலியல்(Tonic) புட்டில்கள் 45 விடுத்த வகையில் மொத்த மதிப்பீட்டுத் தொகை (தோரா. உரு. 1,000) அன்பளிப்பாக வரவு)

| | | |
|---|---|---|
| 8. | க. பழனியப்பன், திருச்சி (செப்டம்பர் மாதக் கொடை) | 30.00 |
| 9. | அரசத் தொகையன், சென்னை. | 10.00 |
| 10. | ஈரோடு, பாச்சுடர், புலவர் இரா. வடி) வேலனார் கொடுத்த புரப்பாளர் நன்) கொடை வரவு) | 1,000.00 |
| 11. | க. பழனியப்பன், திருச்சி (அக்டோபர் நன்கொடை) | 30.00 |
| 12. | இல அருட்செல்வன், சேலம். | 18 00 |
| 13. | க. திருப்பாண்டியன், விழுப்புரம். | 8.00 |
| 14. | அரசத் தொகையன், சென்னை (அக்டோபர் கொடை) | 10.00 |
| 15. | எ. இராமச்சந்திரன், வேலூர். | 27.00 |
| 16. | துரைராசு, பாண்டிச்சேரி. | 8.00 |
| 17. | புலவர். நாவை. சிவம், மணப்பாறை | 4.30 |
| 18. | க. பழனியப்பன், திருச்சி. (நவம்பர் கொடை) | 30.00 |
| 19. | க. அருணாசலம், தாராபுரம். | 10.00 |
| 20. | சி. பொன்னெழிலன், சென்னை-17. கொடுத்த புரப்பாளர் நன்கொடை வரவு | 1,000.00 |
| 21. | துரை. கிருட்டிணமூர்த்தி, சென்னை. | 5.00 |
| 22. | க. இராமசாமி, விளாத்திகுளம். | 8.00 |
| 23. | பட்டு சுப்பிரமணியம், சென்னை. | 10.00 |
| 24. | பழ. மகிழ்நன்-மேனகை, இராமநாதபுரம் (திருமண அன்பளிப்பு) | 20.00 |
| 25. | அரசத் தொகையன், சென்னை (நவம்பர் நன்கொடை) | 30.00 |
| 26. | மேழிவளவன், பள்ளபட்டி | 5.00 |
| 27. | அரசத் தொகையன், சென்னை. (சனவரி) | 10.00 |
| 28. | க. பழனியப்பன், திருச்சி. (திசம்-சனவரி) | 50.00 |
| 29. | செங்கோட்டையா நல்லையா, மலேசியா (புரப்பாளர் நன்கொடை) | 1,000.00 |
| 30. | ,, ,, | 7.50 |
| 31. | துரை. சம்பத்குமார், ஈரோடு. | 27.00 |
| 32. | ப. செயராமன், உடுமலைப்பேட்டை. | 25.65 |
| 33. | பீர்முகம்மது, திருப்பதி. | 8.00 |
| 34. | க. பழனியப்பன், திருச்சி.(பிப்ரவரி கொடை) | 30.00 |
| 35. | பேரா. தாயம்மாள் அறவாணன், சென்னை. | 100.00 |

# நூல்கள் வெளியீடு !

ஒவ்வோர் ஆண்டும் உலக நாடுகள் கீழ்வருமாறு நூல்களை வெளியிட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| சோவியத்து உருசியா: | 82,800 | நூல்கள். |
| பிரிட்டன். | 51,400 | ,, |
| மேற்கு செர்மனி | 48,000 | ,, |
| சப்பான். | 44,000 | ,, |
| கொரியா | 35,000 | ,, |
| இந்தியா. | 19,000 | ,, |

ஆண்டுதோறும் இந்தியாவில் வெளியாகும் 19,000 நூல்களில் ஆங்கில நூல்கள் 40 %. இந்தியாவிலுள்ள 15 தேசிய மொழிகளிலும் ஆண்டுக்கு 10 அல்லது 11 நூல்களே வெளியாகின்றன.

மேலும், இலக்கியத் துறையில் வெளியாகும் நூல்கள்தாம் இந்தியாவில் மிகுதியாக வெளிவருகின்றன.

இலக்கியம் என்னும் தலைப்பில் அமெரிக்கா தன் மொத்த வெளியீடுகளில் 7 விழுக்காடு நூல்களையும், உருசியா 12 விழுக்காடு நூல்களையும், சப்பான் 18 விழுக்காடு நூல்களையும், பிரிட்டன் 21 விழுக்காடு நூல்களையும் வெளியிடுகின்றன.

இந்திய மொழிகளிலோ வெளியாகும் மொத்த நூல்களில் 70 முதல் 75 விழுக்காடு வரையில் வெளியிடப்பெறும் நூல்கள் அனைத்தும் கதை கட்டுரை, பாடல், புதினம் ஆகிய இலக்கியங்களே ஆகும். அறிவுத்துறை நூல்கள் மிகமிகக் குறைந்த அளவிலேயே வெளியிடப் பெறுகின்றன.

— பர். குழந்தைசாமி.
சென்னையில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| 36. | இரா. பாலகங்காதரன், திருச்சி. | 110.00 |
| 37. | அரசத் தொகையன், சென்னை. (பிப்ரவரி) | 10.00 |
| 38. | அ. பொன்னுசாமி, கொக்கராயன் பேட்டை. | 4.00 |
| 39. | சோதிப்பிரகாசம், விசாகப்பட்டினம். | 20.00 |
| 40. | தமிழ்க்கனல், தஞ்சாவூர். | 11.00 |
| 41. | என்.கே.ஆர்.பி. சந்திரன், இட்டார்சி. (ம.பி.) | 30.00 |
| 42. | தென்மொழி நா. இளமாறன், எண்ணூர். | 50.00 |
| 43. | க. பழனியப்பன், திருச்சி. (மார்ச்சு கொடை) | 30.00 |
| 44. | சோ. மணிமுத்து, பழனி. | 3.00 |
| 45. | க. பழனியப்பன், திருச்சி (ஏப்பிரல் கொடை) | 30.00 |
| 46. | சி. கபிலன், சென்னை. | 14.00 |
| 47. | பாவலர். த. கோவேந்தன், சென்னை | 40.00 |
| 48. | பாலகிருட்டிணன், மலேசியா. | 7.65 |
| 48. | அ.ச. சுப்பு, அம்பாசமுத்திரம். | 5.00 |
| 50. | அரசத் தொகையன், சென்னை. (ஏப்பிரல் நன்கொடை) | 10.00 |

# - தீக்கதிர் போலெழுக -

- வள்ளி கேள்வன் -

என்னருந் தமிழா! நாட்டில் எட்டப்பர் மலிந்து போனார்.
பன்னெடுங் காலம் ஓங்கிப் பரந்தநம் தமிழி னத்தை
இன்னல்கள் செய்வார் பாதம் இறைமையென் றேந்திக்
[கொண்டார்;
தன்னலம் பேணல் ஒன்றே தகைமைசேர் பண்பாய்க் கண்டார்

காட்டியே கொடுக்கும் புன்மை கருதுநற் றொண்டாய்க் கொண்டார்
நாட்டிலே ஆரி யத்தின் நச்சுவேர் பரவி ஊன்றும்
கேட்டையே புரிந்து நின்றார்; கேடுற்ற நாமோ இன்னும்
ஈட்டியில் முனைமு றிந்த ஈட்டியாய்க் கிடக்கின் றோம்காண்!

தேசிய ஒற்று மைக்கே தேரைவாய் பிளத்தல் போல
பூசிய கணிகைப் பேச்சு; பொய்களை மெய்க ளாக
வீசிடும் கயமை அன்றோ மென்றமிழ் நாட்டின் உண்மை
தேசினை மறைத்த(து) இன்னும் தெளிகிலாய் தெளிகி லாயே!

மொழிவீழ்த்தி இனத்தை வீழ்த்தி முடிக்கவே தில்லி ஆட்சி
விழிபார்த்துக் கிடக்கும் வேளை விழுகின்ற எலும்புத் துண்டைக்
கழுவியங் கெடுத்துத் தின்றே எட்டப்பர் நன்றி காட்டி
தழல்தனைத் தண்ணீர் என்றே தமிழ்நாட்டில் தெளிக்கின் றார்காண்!

காவிரி வற்றும் போது கங்கையைப் புகழ்வார்; ஏழ்மை
மேவியே தமிழர் வாட, வேள்வியால் செல்வம் தேய்க்கும்
காவியைப் போற்றிச் செய்வார்; கைகட்டி நடுவண் ஆட்சி
கோவில்போல் நன்மை என்பார்; கொள்வர்காண் அடிமைக் கூலி

இந்தியைக் கற்பீர் என்பார்; இந்தியால் வாழ்வுண் டென்பார்;
இந்திய னாக வாழ்தல் ஏற்றம்காண் என்று வீதிச்
சந்தியில் நின்று மங்கை தன்கற்பை விரித்தல் போல
முந்திவந் துரைப்பார் நம்மை மூங்கையென் றெண்ணிக்
[கொண்டே.

வாழவே தமிழ ஈழ மறவர்கள் போர்மேல் நின்றார்;
கோழையர் எட்டப் பர்கள் கொத்தடி மையர்கள், தெற்கு
வீழவே வேண்டும் என்னும் வெறிகொளும் வடவ னுக்கே
கூழைமைத் தொழும்பு கொண்டார்; கொதித்துநாம் எழவேண்
[டாமோ?

வாய்க்குநல் அரிசி யோடு வளமும்எட் டப்பர்க் குண்டு;
போக்கிலா தில்லி ஆட்சி பொற்றமிழ் இனத்தின் வீழ்ச்சி
தீக்கதிர் போலெ ழுந்தே திசைதிசை ஆர்ப்பரித்துத்
தாக்கினால் அன்றி இந்தத் தமிழினம் மீளா துண்மை!

தொடர் :8

நூற்சுருக்கம்

# இன்றுள்ள தமிழர்கள்!

நூல்: தமிழர் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்;
ஆசிரியர் : பர். க. ப. அறவாணன்.
விலை : 304 பக்கம். உரு 25/-
கிடைக்குமிடம்: ஐந்திணைப் பதிப்பகம்,
282, பைகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5;

அரசியலில் பெண்டிர் சமப்பங்கு பெற்றிருந்தனர் என்பதைச் சிலப்பதிகார நெடுஞ்செழியனுக்குப் பக்கத்தில் இருந்த கோப் பெருந்தேவியின் இருப்பும், கண்ணகி மன்னரையே எதிர்த்துப் போராடும் திறனும், தொண்டைமானிடம் அதியமானுக்காகத் தூது செல்லும் ஔவையின் அரசியல் ஆற்றலும் பண்டைய இலக்கியங்களில் பேசப் பட்டிருக்க, கி.பி. 14-ஆம் நூற்றுண்டில் எழுந்த வில்லிபுத்தூரார் பாரதம் 'அரசியலில் இடம் பெறச் சிறிதும் தகுதியற்றவர் பெண்டிர்' என்று பேசுகிறது. (27 : 50)

வழிபடும் தெய்வமாகப் பண்டைக் காலத்தில் இருந்த பெண்டிர் சம உரிமை உடையவராகக் கழகக் காலத்து இருந்த பெண்டிர், வீட்டில் அடைக்கப்பெறும் அறிவற்ற அடிமைப் பெண்டிராகக் கருதப் பெற்றது, ஏன்?

வட இந்தியாவிலிருந்து தென்னகம் போந்த சமண சமயமே முதல் காரணமாகும். சைனர் 'பெண் நேராக வீடு பேறு அடைய முடியாது; ஆணுகப் பிறந்துதான் அடைய முடியும்' என்றனர்; பெண் பிறவியை 'இழிபிறவி' என்று தூற்றினர்;

சைனருக்குப் பின்வந்த வேத ஆரியரும் பெண்களுக்குச் சம நிலை தரவில்லை. 'பெண் இளமையில் தந்தையையும், மணமான பின் கணவனையும், கைம்பெண் ஆன பின் மகனையும் சார்ந்து நிற்க வேண்டும்' என்று நெறி அமைத்தது மனுசுமிருதி (5 : 148); வட இந்திய ஆரிய மரபு குழந்தைப் பருவ மணத்தை ஊக்கியது; கைம்பெண்ணுக்கு மறுமண உரிமையைத் தடுத்தது. கணவன் இறந்த பின் தீப்பாய்ந்து உயிர் துறத்தலைக் கட்டாய மாக்கியது. மதிப்புக்குரிய மகளிர்க்கு மறுமணம் இல்லை (மனு. 5 : 162); எட்டு அகவைப் பெண்ணுக்குத் திருமணம் செய்விக்கலாம் என்பர் மனு (9 : 88, 94). கைம்பெண்கள் காய்கனி, கிழங்கு போன்ற சிற்றுணவை மட்டும் உண்டு வாழ்நாளெல்லாம் நோன்பு இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர் மனு (5 : 157, 158). பல்மனைவியர் திருமணத்திற்குத் தடையே இல்லை. குமுகாயத்தில் ஆண் வழித் தலைமை ஏற்பட்டபோது பெண்ணுக்குரிய சொத்துரிமை மறுக்கப் பட்டது.

சைனருக்குப் பின்பு வைதிக ஆரியர் பெண்ணடிமை நிலையைப் பேணி வளர்த்தனர். அவர்க்குப் பின்பு வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் ஐரோப்பியர் ஆட்சி ஏறும்வரை, பேராட்சி

Scanned with CamScanner

செய்து கொண்டிருந்த முசுலீம் மதமும் மக்களும், மன்னனும் பெண்ணுக்கு இருந்த ஒரு சில உரிமைகளையும் மறுத்தனர். முசுலீம் மதத்துக்கு மாறிய தமிழ்ப் பெண்களுக்குக் கற்கும் உரிமை, சொத்துரிமை, ஆடவர் போல். உரிமையாகப் போர்த்தல்(பர்தா) இன்றி வெளியே செல்லும் உரிமை ஆகியவை மறுக்கப்பட்டுக் கொடும் வெயில் தணலும் தமிழ்நாட்டில் கூட தலை முதல் கால் வரை துணியால் முகம் உட்பட மூடித்தான் செல்லல் வேண்டும் என்று கட்டாயப் படுத்தப் பட்டனர். முசுலீம் ஆடவர் மனைவியர் பலரை மணந்து கொள்ளலாம் என்று அனுமதித்ததன் மூலம் பெண்ணிற்குரிய சம உரிமை முற்றுக மறுக்கப் பட்டது.

ஆக, வட இந்தியாவிலிருந்து தமிழகம் நோக்கிப் பண்பாட்டுப் படையெடுப்புகளை நடத்திய சைனர்களால், வேத ஆரியர்களால், துருக்கி முசுலீம்களால் தமிழ்ப்பெண்டிர் பெற்றிருந்த சம வாய்ப்பு குழி தோண்டிப் புதைக்கப்பட்டது.

தாய்வழிக் குடிமுறை தவிர்த்தமை :

இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் நிரம்பி இருந்த தமிழர் (இவ்விடத்தில் நூலாசிரியர் திராவிடர் என்று குறிப்பிடுவது வரலாற்றுத் தவறுடையது. —தமிழினத்தைத்தான் ஆரியர் திராவிட இனம் என்று குறிப்பர். பிறகு கால்டுவெல் காலத்தில் மொழிநிலையில் அவ்வழக்கு ஆழமாக வேரூன்றி, திராவிட இனத்தை அயல்நாட்டினமாகக் காட்டும் படியான வரலாற்றுப் பிழையாக மாற்றிக் கொள்ளப்பெற்றது. —இதழாசிரியர்.) முற்காலத்துத் தாய்வழி முறையையே பின்பற்றி வந்தனர். இதனை அவரிடம் இலைமறை காயாக மறைந்தும் திரிந்தும் எஞ்சி நிற்கும் சில கூறுகள் உறுதி செய்கின்றன.

1. தமிழ்நாட்டில் மிகுதியான மக்களால் வழிபடப்படும் கோயில்கள் அம்மன் கோயில்களே.

2. ஒரு காலத்தில் தமிழர் (தமிழினத்தவர் அஃதாவது திராவிடர் எனப்படுவோர்) தம் குழந்தைகளுக்குப் பெயரிடும் பொழுது தாய்ப் பெயரையே முதலெழுத்தாக அல்லது முதல் பெயராக அமைத்து வழங்கினர். இப்பழக்கம் இன்றும் தென் கருநாடகம், கேரளம், தமிழகக் குமரி மாவட்டம் ஆகிய பகுதிகளில் ஓரளவு பின்பற்றப்பட்டு வருகிறது.

தமிழர்தம் தொல்பழங்கடவுளாகக் கருதப்பெறும் முருகனைப் பண்டைய இலக்கியங்கள் தந்தைவழிப் பெயரிட்டு அழைப்பதில்லை. திருமுருகாற்றுப் படை, முருகனை 'மலைமகள் மகனே' என்றும் 'கொற்றவை சிறுவ' என்றும், 'பழையோள் குழவி' என்று சுட்டுகின்றது. இக்குறிப்புகள் தமிழர் ஒரு காலத்தில் தாய்வழிச் சார்ந்து பெயர் வைத்துக் கொண்டனர் என்பதைக் காட்டும் தலைமைக் குறிப்பாகும்.

தமிழரைச் சார்ந்தே வடமொழியாளரிடமும் இப் பழக்கம் இருந்தது என்பதைக் 'காத்யாயனி புத்ர' 'கௌதம் புத்ர' என்ற ஆச்சாரியார் பெயர்கள் சுட்டு கின்றன. இத்தகைய போக்கு பிள்ளை வளர்ப்பதில், தாய் பெற்றிருக்கும் முதன்மையைக் காட்டுவதாகச் சங்கராச் சாரியார் குறிப்பிடுவர். ஆனால் தாய்வழி உரிமைக் குமு கத்தவரான தமிழர் போன்றோரின் தொடர்பாலும் இஃது ஏற்பட்டிருக்கலாம்,

தமிழரை ஒத்த பழக்க வழக்கங்களை உடைய ஆப் பிரிக்கரிடமும் தாய்வழிப் பெயரிடும் முறை இன்றும் வழக்கில் உள்ளது. ஆப்பிரிக்க மரபு மதத்தைச் சார்ந்த அனைவரும் தாய்ப்பெயரையே முதலெழுத்தாகக் கொண்டு பெயரிட்டு அழைப்பர்.

4. சுழக இலக்கியங்களிலும், தொல்காப்பிய இலக்கணத்தி லும் அகத்துறை மரபு பற்றிய ஒரு செய்தி ஆழ்ந்து நோக்கத் தக்கது. அகத்துறைக் கூற்றுக்கு உரியோராக நற்றாய், செவிலி, பாங்கன், பாங்கி முதலானோர் இடம் பெறுகின்றனர். ஆனால் கூற்றுக்கு உரியவராகத் தந்தை இடம் பெறாமை உற்று நோக்கற்கு உரியது. மகளின் திரு மண வாழ்வில் தாய்க்குச் சமமான முதல் உரிமை பெற்ற வன் தந்தை. அப்படியிருந்தும் அவன் கூற்றாக அகக்கூற்று எதுவும் சுட்டப் படாமை வியக்கத் தக்கது. உடன் போக் கில் சென்று விட்ட மகளைத் தேடுவதில் கூட தந்தை இடம் பெறாமை எண்ணத் தக்கது. இச் செய்தி ஒரு காலத்தில் தமிழ்க்குமுகாயத்தில் தாய் பெற்றிருந்த முதன்மையையும் தந்தை பெற்றிருந்த தலைமை இன்மை யையும் குறிப்பாகச் சுட்டுகிறது.

5. அண்மைக் காலம் வரை, தென்திருவிதாங்கூரிலும் குமரி மாவட்டத்திலும், சொத்துரிமை ஆண்மக்களுக்குச் சேரா மல் பெண் மக்களுக்குச் சேரும் மருமக்கள் வழி மரபாகப் பின்பற்றப்பட்டிருந்தமை கருதத் தக்கது.

6. தமிழ்க் குடும்பங்களில் மட்டுமல்லாமல் அரசுகளில் கூடப் பெண்கள் தலைமை எய்தி இருந்தனர் என்பதைக் கிரேக் கர் தரும் ஒரு குறிப்பு எடுத்துரைக்கின்றது. கி.மு. 302-296 வரை, சந்திர குப்தமௌரியர் பேரவையில் கிரேக் கத் தூதுவராக இடம் பெற்றிருந்த மெகத்தனிசு தம் இண்டிகா என்ற நூலில் தமிழ் நாட்டு மதுரையில் பெண் ஆட்சி நடைபெற்றதை, எராகிளிசு (Heraclis) என்ற மன் னருக்குப் பாண்டியா என்ற ஒரே பெண் மகள் இருந் தாள். அவளே மதுரையை அன்று ஆண்டாள். மகளுக் குத் தந்தை 500 யானைகளும் 4,000 குதிரைப் படை களும், 13,000 காலாட்களும் அன்பளிப்பாக நல்கினார். மதுரையை, மீனாட்சி ஆண்டாள் என்ற வரலாறும்,

Scanned with CamScanner

மதுரை மீனாட்சிக் கோயிலும் பெண்டிர் தலைமை பெற்றிருந்த வரலாற்றை வற்புறுத்துகின்றன.

ஆரியர் கலப்பாலும் யவனர் வரவாலும் உறவாலும் தமிழர் தாம் பின்பற்றி வந்த தாய்வழி மரபைவிட்டு விட்டனரோ என்று கருத இடம் இருக்கிறது.

7. ஆரியர், ஆணுக்குத் தலைமையும் சொத்துரிமையும் தந்து, பெண்களுக்கு மறுத்தனர். காரணம் கி.மு. 1500 அளவில் வடமேற்கு எல்லை வழியாக, இந்தியா நுழைந்த ஆரியர் கூட்டத்தில் ஆடவரே மிகுதி; பெண்டிர் சிலரே. திராவிடரை ஆரியர் வென்றபின், திராவிடப் பெண்டிரை ஆரியர் மணந்தனர். சான்று, கேரளத்தில் இருந்த நம்பூதரி பிராமண நாயர் திருமணக் கலப்பு. அவ்வாறு கலப்பு நிகழவே அயன்மை இனமான திராவிடப் பெண்டிரின் தலைமையை ஆரியர் ஒழித்தனராதல் வேண்டும்,

திருமண முறைகள் :

திருமணத்தில் மணமகன் மணமகளுக்குத் தாலிகட்டும் சடங்கு பண்டு இல்லை. இலக்கியங்களில் மங்கல அணியென்றும், ஐம்படைத்தாலி என்றும் வரும் குறிப்புகள் திருமணத்தாலியைத் தான் உணர்த்தின என்பதற்கான சான்று இல்லை. மிக வெளிப்படையாக ஆண் பெண்ணுக்குத் தாலி கட்டும் மிகப் பிற்கால நூலான கந்த புராணத்தில்தான் வெளிப்படையாகப் பேசப்படுகிறது... இதில் கூட தெய்வயானை என்ற ஆரியப் பெண்ணை மணந்து கொள்ளும் சமயத்தில் முருகன் தாலி கட்டினான் என்ற குறிப்பு கருதத்தக்கது. திருமணத்தோடு தாலிகட்டும் சடங்கை வெளிப்படையாகச் சேர்த்துப் பேசும் மரபு தமிழரிடம் இருந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை. இப்பழக்கத்தைத் தமிழர்கள் பிராமணச் சார்பு பெற்ற மலையாள நாயர்களிடமிருந்து பெற்றிருத்தல் கூடும்.

மலையாளத்து நாயரிடமும் ஈழவரிடமும் பரவி இருந்த புரோகித ஆளுமையும் சமசுக்கிருத ஆளுமையும் தாலி கட்டும் முறையும் காலப் போக்கில் தமிழரிடம் பரவின ஆதல் வேண்டும்.

திருமண அடையாளமாகத் தாலிகட்டுவதும் கணையாழி அணிவிப்பதும் தமிழர் முறைகள் அல்ல... பண்டைத் தமிழ்இலக்கியங்களில் கணையாழி திருமண அடையாளமாக யாண்டும் இடம் பெறுமையும் எண்ணத் தக்கது. பிராமணர்கள் தமிழினப் பெண்களை மணம் முடிக்கும் நிகழ்ச்சியில் தாலி கட்டுதலும் கணையாழி அணிவித்தலும் இடம் பெற்றன. இம் மணமுறை 'தாலி கட்டுக் கலியாணம்' என்று தெளிவாகக் கேரளத்தில் குறிப்பிடப் பெற்றது. எனவே தாலி கட்டும் பழக்கம் கேரள மலையாளிகளிடமிருந்து தமிழர்களிடையில் மிகப் பிற்காலத்தில் பரவியிருத்தல் வேண்டும். அது, கேரள மன்னரின் ஆட்சி குமரி, திருநெல்வேலி, மதுரை ஆகிய எல்லைகளில் விரிவு பெற்ற காலத்தில் மெல்ல மெல்லப் பரவியிருத்தல் கூடும்.

Scanned with CamScanner

**இராமாயணக் கதை :**

இராமாயணக் கதை தென்னிந்தியாவையோ, இலங்கையையோ உள்ளடக்கியது அன்று. இராமாயணத்தில் கூறப்பெறும் இலங்கையும் இற்றை இலங்கை (தமிழீழ இலங்கை) அன்று. அது முற்றும் வடபுலத்து நிலப்புலக்கதை. ஆசிரியர் எழுதிய 'புரட்சிப் பொறிகள்' என்ற நூலைப் பார்க்க). நடுவண் பைதிரத்தில் (மத்தியப் பிரதேசத்தில்) கோண்டா, பைங்கா, கோர்க்கர் என்ற பெயரிய பழங்குடி மக்கள் வாழுகின்றனர். இவர்தம் குலதெய்வம் இராவணனும், கும்பகருணனும் ஆவர். அவ்விருவரையே தம் முன்னோர் என்று இப் பழங்குடியினர் நம்புகின்றனர். இராவணனுக்கும் கும்பகருணனுக்கும் கோயில்கள் உள்ளன. 'தசரா' என்ற விழாவை அங்கு நடத்துகின்றனர். இராவணனை மகிழ்விக்க 'அரக்கிப் பூசை' செய்கின்றனர். எருமைக் கிடா, கோழி, ஆடு, மறி ஆகியவற்றைப் பூசையில் பலியிடுகின்றனர்.

**ஆரியர் வருகை :**

ஆரியர் என்ற காக்கேசிய இனத்தினர் கி.மு 1500 அளவில் போர் வெறி கொண்டவராக வடமேற்கு இந்தியாவில் நுழைந்தனர். சிந்துவெளி நாகரிகத்தைச் சிதைத்தனர்; சிந்துவெளிச் சிற்றூறுகளின் அணைகளை உடைத்தனர். தமிழின (திராவிட) மக்களின் கோட்டைகளைத் தகர்த்தனர். ஆரியர்களின் போர் நடவடிக்கைக்கு ஈடு கொடுக்கமுடியாத தமிழின (திராவிட) முந்தையோர் வட இந்தியாவில் பல பகுதிகளிலும் பரவினர். தென்னிந்தியாவை நோக்கி மக்கள் இடப்பெயர்ச்சிகள் பல நிகழ்ந்தன. கேரளாவில் உள்ள மன்னூர் சாலையில் வாழும் மக்கள், தாம் வடபுலத்தினின்று தென்புலம் போந்ததாக இன்றும் குறிப்பிடுகின்றனர். தென்னகத்தில் (முன்னரே வாழ்ந்து) இருந்த தொன்மைத் தமிழ் மக்களோடு வடமேற்கு இந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்த தமிழின (திராவிட) மக்களும் ஒன்றுகலந்தனர்.

**ஆரிய ஊடுருவல் :**

போர் வெறியுடன் இந்தியாவில் நுழைந்த ஆரியர்தம் போர் வேகம் சிந்துவெளிச் சீரழிவுக்குப் பின் தணிந்தது. ஆரியரை எளிதில் ஏற்க மறுத்த முந்தைத் திராவிடர்களோடு ஆரியர் போர் மோதல்களைத் தவிர்த்துக் கொண்டு, எடுப்பதும் கொடுப்பதும் (give and take policy) ஆகிய கொள்கையைப் பின்பற்றினர்.

பஞ்சாபில் ஆரியர்கள் முதன்மையாகத் திராவிட இனக் குழுக்களுடன் கலந்து பழகத் தொடங்கினர். தன்மயமாக்கும் நிகழ்முறை இங்கே கணிசமாக விரைவில் இடம் பெற்றது. முன்னர் மிக உயர்ந்த நிலையில் இருந்த பண்பாட்டின் ஒரு சில மரபுகள் பல வட்டாரங்களில் இன்னும் எஞ்சி இருந்தமையால் ஆரியர்கள் வட்டார மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்கள். கிழக்குப் பஞ்சாபின் சில பகுதிகளுடன் வட்டார இனக்குழுக்கள் ஆரியர்களைத் தீவிரமாக எதிர்க்க வில்லை. எனவே அவர்கள்

புதிய புதிய நிலப்பரப்புகளில் குடியேறியவாறு விரைந்து கிழக்கே சென்றுர்கள்.

பிராமணர்கள் :

குதிரைகளில் கூட்டமாக வந்த ஆரியர்களுள் பெரும்பாலோர் ஆடவராகவே இருத்தல் வேண்டும். இந்தியாவில் நுழைந்து வட மேற்கு இந்தியாவில் பல பகுதிகளில் நிலைத்த குடியிருப்புகளை அமைத்துக் கொண்ட ஆரியர்கள் இந்தியாவிலேயே நிலைக்கத் தொடங்கி விட்டனர். இதனுல் ஆரிய ஆண்கள் இந்தியப் பழங் குடிப் பெண்களை மணந்து கொண்டனர். சில சமயம் வன்முறை யால் அவர்களைப் புணர்ந்து மணம் கொண்டனர். இதனை ஆரிய ரின் எட்டுத் திருமண முறைகள் உறுதிப் படுத்துகின்றன.

பெண்களைக் கவர்வது இராக்கத மணம்; உறங்கும் மகளி ரொடு உறவாடுவது பைசாசம் எனப்படும்; அன்பளிப்புக் கொடுத்துப் பெண்ணை அடைவது ஆரிடம் எனப்பட்டது. ஆரிய மணமுறைகள் 'மறையோர் தேயத்து மன்றல் எட்டு' என்று தொல்காப்பியரால் குறிக்கப் படுகின்றது. (தொல்.பொருள் 89). இத்தகு ஆரிய வன்முறைகளால் ஒரு கலப்பு இனமே வடமேற்கு இந்தியாவில் தோன்றியது.

இக் கலப்பின மக்களில் தந்தை ஆரியனுவான்; தந்தை மொழி ஆரிய மொழியான சமசுக்கிருதமாகும். தாய் திராவிடப் பெண் ஆவாள். தாய்மொழி அந்தந்த வட்டாரத்துத் திராவிட மொழிகளாகும். ஆரியராகிய தந்தையர்க்குத் தலைமை இருக்க வேண்டும் என்பதனுலேயே, தந்தைவழி அமைப்பு முறையைத் தாய்வழி அமைப்புமுறை உடைய தமிழினத்தவர்(திராவிடர்) மேல் ஆரியர் திணித்தனராதல் வேண்டும். ஆரியத் திராவிடக் கலப்பால் தந்தைக்கு முதன்மை கொடுத்து இந்தியாவில் உரு வான முதல் பெருங் கலப்பினமே பிராமண குலமாகும். இதனைப் பின்வரும் செய்திகள் உறுதி செய்கின்றன. (தொடரும்)


# தமிழ்நிலம்

**உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்**
**கொள்கைகள் அடங்கிய கிழமை இதழ்.**

| | | | |
|---|---|---|---|
| தனியிதழ் | விலை | உரு. | 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | ,, | ,, | 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | ,, | ,, | 25-00 |

தொடர்புக்கு: தமிழ்நிலம், 5, அருணுசலத் தெரு, சென்னை-5

நூல் மதிப்பீடு : 3.

# செயலும் செயல் திறனும்.

பாவலர். கடவூர்—மணிமாறன் க.மு ; கல். இ.

(பாவலரேறு அவர்களின் 'செயலும் செயல் திறனும்' நூல் வெளியீட்டு விழா கடந்த 16-3-88 அன்று, சென்னை, தேவநேயப் பாவாணர் நடுவண் நூலரங்கில் உயர் நெறி மன்ற வழக்கறிஞரும், 'செந்தமிழ் நூல் வெளியீட்டுக் குழு'த் தலைவரும் ஆகிய திரு நா. நல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் நூலை மதிப்பிட்டு அறிஞர் பலர் உரையாற்றினர்கள். அவ்வுரைகளில் ஒன்று இது. பிறரின் திறனாய்வுரைகளும் அவ்வப் பொழுது வெளியிடப்பெறும்.)

நூல் வெளியீட்டு விழாவின் தலைவர் அவர்களே! வணக்கத்துக்குரிய அம்மா அவர்களே! வாழ்த்துரை வழங்க வந்துள்ள அறிஞர் பெருமக்களே! விழாவைச் சிறப்பிக்க வருகை நல்கிய தென்மொழி அன்பர்களே! ஏனைய தமிழ் நெஞ்சங்களே! அனைவர்க்கும் என்னுடைய பணிவான வணக்கம்.

'செயலும் செயல்திறனும்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் அரியவாய்ப்புப் பெற்றமைக்குப் பெருமையும் பெருமகிழ்வும் எய்துகிறேன் பாவேந்தர், பாவலரேறு ஆகிய இருவரின் படைப்புகளையும் ஒப்பிட்டு முனைவர்பட்ட ஆய்வை மேற்கொண்டுள்ள ஓர் ஆய்வு மாணவன் என்ற நிலையில் பாவலரேறு அவர்கள் தம் சீரிய சிந்தனைத் திறத்தாலும் திருக்குறள் ஈடுபாட்டாலும் யாத்துள்ள இந்நூலை அணுகியும் நுணுகியும் பார்த்ததில் முனைவர். வ.சுப. மாணிக்கனார் எழுதியுள்ள 'வள்ளுவர்' போலச் சிறந்த முழு நிறை ஆய்விலக்கியமாக இந்நூல் ஒளிர்கிறது.

திருக்குறளுக்குக் காலந்தோறும் பல புதிய உரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் கருத்துரை, தெளிவுரை (மு.வ:உரை), பொழிப்புரை, விளக்கவுரை என்று பலரும் எழுதி வெளியிட்டு வருவதுபோல, இந்நூல் ஓர் ஆய்வுரையாக மலர்ந்து மணம் பரப்பும் பாங்கினைப் பெறுகிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இருபத்தைந்து பெரிய தலைப்புகளில், பல உட் பிரிவுகளை உள்ளடக்கி முந்நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில், பல ஆண்டுகளாக வந்த ஒரு கட்டுரைத் தொடர் ஓர் ஆய்வு நூலாக வெளிவந்திருப்பது தமிழ் இலக்கிய உலகத்துக்கு ஒரு புதிய வரவாகும்.

காலச்சூழல் அடிப்படையில் இளைஞர்களும் இன்றைய சிறார்களும் எத்தகைய செயல்திறன் வாய்ந்தவர்களாக விளங்க வேண்டும் என்பதை வள்ளுவரின் வழியில் நின்று வழிகாட்டி ஒளி கூட்டும் உயரிய கலங்கரை விளக்கமாக இந் நூல் திகழ்கின்றது.

Scanned with CamScanner

செயலை அடிப்படையாகக் கொண்டு வள்ளுவர், தெரிந்து செயல் வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், வினை செயல் வகை, வினைத் திட்பம், வினைத் தூய்மை போன்ற பல அதிகாரங்களைப் பாடியுள்ளார். உணர்வு குன்றியும், உண்மை நிலையை உணராமலும் மடிஞர்களாயும் மான மிலிகளாயும் திரிந்தலையும் இன்றைய இளைஞர்களின் போக்குக்குப் பெரிதும் வன்று அவர்கட்கு விழிப்பூட்டிச் செயல் திறன் மிக்கவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகவே இந்நூலைப் பாவலரேறு அவர்கள் படைத்திருக்கிறுர்கள் என்று நம்புகிறேன்.

ஓர் ஆய்வு நூலுக்கு இருக்க வேண்டிய அனைத்துத் தகுதிகளும் இந்நூலுள் பொதிந்து கிடப்பதை யாண்டும் பரக்கக் காணலாம். வெறுஞ்சொற்களால் வேண்டாத கருத்துகளை வலியுறுத்தி, எவரும் விரும்பாத போக்கிலேயே இக்காலத்தில் பல நூல்கள் எழுதப் பெற்று வருகின்றன; இதற்கு மாறாக, திருக்குறளிலேயே தோய்ந்து பல சிந்தனை முத்துகளைக் கண்டறிந்து இந் நூலுக்கு இறவாப் புகழையும், இணையிலாத சிறப்பையும் பாவலரேறு அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

திருக்குறள் ஓர் அற இலக்கியம் மட்டுமன்று; முழுமையான வாழ்வியல் இலக்கியமும் ஆகும். இத்தகைய அரிய சிறப்பு வாய்ந்த திருக்குறளில் இல்லாததில்லை; பொல்லாததில்லை; சொல்லாத தில்லை என்று அறிஞர்கள் போற்றிப் புகழும் பெற்றியினை நாம் அறிவோம்.

புதுமை நோக்கில் இதற்கு முன் வேறு எவரும் கூறியிராத பல அரிய சொற்றொடர் விளக்கங்களையும் கருத்துகளையும் வள்ளுவராகவே அமைந்து, தம் கூர்த்த நுண்ணறிவுப் புலமைத் திறத்தால் பாவலரேறு அவர்கள் இந்நூலில் விளக்கியிருப்பது இந் நூலின் தனிச் சிறப்பாகும்.

நுனிப்புல் மேய்வாரையும் குறை குடங்கள் போல் வாரையும் இன்றைய இலக்கிய உலகம் முடி சூட்டி முகமன் மொழிந்து மகிழுகின்ற நிலையில், அடக்கவுணர்வோடும், ஆழமான இலக்கண இலக்கியப் புலமைச் செறிவோடும் தம் எழுத்து, சொல் வன்மைகளை வெளிப்படுத்தி வரும் அய்யா பாவலரேறு அவர்கள் இத்தகைய அரிய இலக்கியங்களைப் படைத்துத் தமிழுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

தமிழன்பர்கள் ஆண்டுதோறும் பாவலரேறு அவர்களின் நூல் ஒன்றை வெளியிடுவதைத் தங்கள் கடமையாகவும் கொள்கையாகவும் கொண்டு செயல்பட வேண்டும். மிக விரைவில் பாவலரேறு அவர்கள் எழுதி வரும் 'திருக்குறள் மெய்ப்பொருள் உரை' யும் முழுமைபெற்று நூல் வடிவம் பெற வேண்டும் என்று இங்கே குழுமியுள்ள தமிழ் நெஞ்சங்களை வேண்டி, இந் நூலை வெளியிட்ட செந்தமிழ் நூல் வெளியீட்டுக்குழுவினரைப் போற்றிப் பாராட்டி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன். வணக்கம்.

நூல் மதிப்பீடு 4 —தென்மொழி. ந. முத்துக்குமரன்: அறி.இ:

அன்பிற்குரிய விழாவின் தலைவர் வழக்கறிஞர் திரு: நல்லப்பனார் அவர்களே! மதிப்பிற்குரிய நூல் வெளியீட்டாளர் திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களே! அறிஞர் பெருமக்களே! அன்புத் தமிழ் நெஞ்சங்களே! அனைவர்க்கும் முதற்கண் வணக்கம்.

நேர நெருக்கடி கருதி இரண்டு கருத்துகளை மட்டும் என் உரையிலே குறிப்பிட வேண்டிய இன்றியமையாத நிலையில் உள்ளேன். முதலாவது இங்கே நம் அன்பிற்கு உரிய புலவர் குறிப்பிட்டது போல் இவ்வுயர்ந்த கருத்துச் செறிவுள்ள நூலைத் 'தமிழ்ச் சிட்டி'ல் வெளியிட்டது தவறு எனக் குறிப்பிட்டார்கள். அதனை விளக்க வேண்டுவது கடமையாகும். இந்நூல் அனைவர் வாழ்விற்கும் தேவையான சிறந்த வாழ்வியற் கருத்துகள் கொண்டது-என்பது உண்மை. எனவே, எளிய கல்வி அறிவு உள்ளவர்கட்கும் அது பயன்பட வேண்டும், என்பதனாலேயே சிறுவர்களை மனத்தில் எண்ணி அவர் எழுதப் புகுந்தமையினால் வாழ்வின் அரிய உண்மைகள் எளிமையாக்கப்பட்டு இருப்பது நூலின் சிறப்புத் தன்மைகளில் ஒன்று. பாவலரேறு அவர்களின் தெருப்பொதுக்கூட்ட உரைகளையும் இலக்கியக் கூட்ட உரைகளையும் கேட்டவர்களுக்கு அவரின் 'அவைக்கு ஏற்ற கருத்து வெளிப்பாட்டு முறை' நன்கு விளங்கும். எனவே, 'தமிழ்ச் சிட்டுச் சிறுவர்களை மனத்தில் அவையாக வரித்துக் கொண்டு எழுதியமையால்தான் நூல் தொடக்கப் பள்ளிக் கல்வி பயின்ற தொழிலாளர்கட்கும் பயன்படத்தக்க முறையில் அமைந்திருப்பதை உணரலாம்.

இரண்டாவதாகத் தமிழர்கள் அதிகம் பேசக் கூடியவர்கள். இது வெறும் பொதுவான கூற்று அன்று. சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்நாட்டிலுள்ள பல்வேறு இன மக்கள் தொலைபேசியிலே பேசப்படுகின்றவை பதிவு செய்யப்பட்டன. அதிலே தமிழர்கள் தாம் அதிகம் பேசுகிறார்கள் என்கின்ற உண்மை கணிக்கப்பட்டு, ஓர் இதழில் வெளிவந்திருந்தது. இப்படி உணர்வு மிகுந்த தமிழர்கள் பேச்சிலேயே தங்கள் உணர்வுகளுக்கு வடிகாலமைத்துக் கொண்டு அமைந்து போய் உலகின் ஏனைய இனங்களில் தாழ்த்தப்பட்டோராய் உள்ளனர். ஒரு மாந்தனை மேம்படுத்தவல்லது செயல் என்றால் ஓர் இனத்தை மேம்படுத்தவல்லது பெருஞ்செயலாக—அருஞ்செயலாகத் தானே இருக்க இயலும். செயற்கு உரிய செய்யவே தெரியாத, தமிழர்களைச் செயற்கு உரியவற்றைச் செயல் திறனோடு செய்வதே செயற்கரிய செயல்களைச் செய்ய அணியப்படுத்தும் என்பது நூலின் உட்கிடக்கையாக இழையோடியிருப்பது நுணுகி நோக்கினார்க்குப் புலப்படும் உண்மையாகும்.

இறுதியாக இந்நூலின் தனிச்சிறப்புப் பற்றிய என் கருத்து ஒன்றினைக் கூற விரும்புகிறேன். ஓர் அறிஞரின் பல நூல்கள் இருப்பினும் அதில் தலைசிறந்த நூல் (Master piece) ஒன்றாக இருப்பது இயல்பு. திரு.வி க. அவர்களின் 'பெண்ணின் பெருமை', மு.வ.

# செய்திகள்.

(இடமின்மையால் கடந்த நவம்பர் 87 முதல் செய்திகள் வெளியிடப் பெறவில்லை. எனவே ஒட்டுமொத்தமாக இங்கு வெளியிடப்பட வேண்டி வந்தது.)

## 1. உ. த. க. தங்க வயல் கிளை, பாவாணர் படிப்பகம்: தமிழீழ விடுதலை விளக்கப் பொதுக் கூட்டம்:

கடந்த துலை 25 (11-11-87) அறிவன் கிழமை மாலை 6 மணி யளவில், சியார்சு மன்னர் திடலில், உ. த. க. தங்கவயல் கிளை, பாவாணர் படிப்பகம் சார்பில், திரு. அரங்க மகிழ்நன் தலைமையில், தமிழீழ விடுதலைப் போராட்டமும், இந்திய — சிறிலங்கா ஒப்பந்தமும் என்னும் தலைப்பில் விளக்கப் பொதுக் கூட்டம் நடை பெற்றது. அந்நேரம் மழையும் புயலுமாக இருந்தும் அரங்கு நிறைய ஆர்வலர்கள் கூடியிருந்தனர். செயலர் த. அன்பிற்கரசு வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் முன்னுரைக்குப் பின், பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பிட்ட தலைப்பில் 2 மணி நேரம் அரிய கருத்துரை ஆற்றினார்.

## 2. ஈழமக்கள் விடுதலைக்கான உண்மையான ஆதரவு -- தமிழக விடுதலையே! -- கருத்தரங்கம்.

சென்ற 20-12-87, சென்னை, பெரியார் திடலில், காலை 9 மணி முதல், மாலை 9 மணி வரை, இடைவேளை நண்பகல் 2 மணி முதல் 3 வரை இடையிட்டுத் தமிழ் மக்கள் விடுதலைக்கான இளைஞர் மாணவர் கூட்டணியின் சார்பில், மாணவர், இளைஞர் மாநாடு ஒன்று நடைபெற்றது. காலை நிகழ்ச்சிக்கு, முற்போக்கு மாணவர் சங்கத்தைச் சேர்ந்த விவேக் தலைமையேற்றார். தமிழக இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த தங்கராசு வரவேற்புரை ஆற்றினார். காலைக் கருத்தரங்கில் சென்னை, பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, சட்டக் கல்லூரி, நந்தனம் கலைக் கல்லூரி, தியாகராசர் கல்லூரி, புதுக் கல்லூரி, அச்சுத் தொழில் நுட்பக் கல்லூரி, நடுவண் தொழில் நுட்பக் கல்லூரி, பல்லவன் தொழில் நுட்பக் கல்லூரி, புதுச்சேரி தாகூர் கலைக் கல்லூரி, திருச்சி பிசப் ஈபர் கல்லூரி — ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும் பொதுவான இளைஞர்களும் பேசினர்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்', என்பனபோல், இது வரை வெளிவந்த பாவலரேறு அவர்களின் நூல்களில் தலை சிறந்த நூல் 'செயலும் செயல்திறனும்' என்பதாகும். இதனைக் கற்பதோடு பிறருக்கும் கற்பித்து நம் இனம் மேன்மையடைய நம்மை ஒப்படைத்துக் கொள்வோமாக என உறுதி பூண்டு என் உரையை நிறைவு செய்து விடைபெறுகிறேன்,

நன்றி, வணக்கம்.

பிற்பகல் நடந்த அறிஞர்கள் மாநாட்டிற்குத் தமிழக இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த பொன். பரமேசுவரன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு மாணவர் பேரவையைச் சேர்ந்த உலகநாதன் வரவேற்புரையாற்றினார். இக் கருத்தரங்கில் கலந்து கொள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் அழைக்கப் பட்டனர். ஆனால் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி எசு. என். நாகராசன், தமிழக இளைஞர் மையம் செல்வம், தமிழ் இன விடுதலைக் கழகம் வழக்கறிஞர் இராமதாசு முதலியோர் கலந்து கொண்டு, தங்கள் மேலான கருத்துகளைத் தெரிவித்தனர். இறுதியாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் விரிவாகவும் விளக்கமாகவும் 'ஈழ மக்கள் விடுதலைக்கான உண்மையான ஆதரவு என்பது தமிழக விடுதலையை மீட்டெடுப்பதே' என்று முற்ற முடிவாகப் பேசிக் கருத்தரங்கை முடித்து வைத்தார்கள். கருத்தரங்கு இதை இறுதியில் ஒரே தீர்மானமாக நிறைவேற்றியது. செல்வமணி நன்றியுரை கூற மாநாடு இனிதே நிறைவுற்றது.

## 3. வா. மு. சே. மகள் திருமணம்:

சென்ற 22-1-88-ஆம் பக்கல் வெள்ளிக் கிழமை காலை 8-30 மணியளவில், சென்னை, அண்ணாநகர் நடுவண் குமுகாயக் கூடத்தில், பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் - சேதுமதி அவர்களின் செல்வி. சே. பூங்கொடி அறி. இ. க்கும் செல்வன் நா. மதியழகன். க. மு. வுக்கும் தமிழவேள், கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் திருமணம் இனிதே நடைபெற்றது. இத் திருமணத்தில் பேரறிஞர்களும். பெரு வணிகர்களும், பெருமகர்களும் ஆகிய பர். ந. சஞ்சீவி, சங்கு செய்யது அப்துல் காதர், இராம. அரங்கண்ணல், பர். கிருட்டிணசீனிவாசன், பேரா. கு. இன்னாசி, சா. கணேசன், பேரா. தமிழ்க்குடிமகன், பர். விக்கிரமன், பர். வாசவன், பர். கோவி. மணிசேகரன். பாவலர். த. கோவேந்தன், பர். செங்குட்டுவன், திரு. அசன் முகமது பேரா. பிச்சாண்டி முதலியோர் கலந்து கொண்டனர். திருமணத்தை திரு. வேலா. இராசமாணிக்கனார் நடத்திவைத்தார். திருமண மக்களை முதன் முதலாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வாழ்த்துத் தெரிவிக்கும் முகத்தான் அரிய இன நலக் கருத்துகளை வாழ்வியலோடு பொருத்திக் காட்டியதை அனைவரும் வியந்து கேட்டனர். இறுதியாகக் கலைஞர் அவர்கள் மணமக்களை வாழ்த்தி அரிய கருத்துகளை எடுத்துக் கூறினார்.

## 4. இலயோலாக் கல்லூரிக் கருத்தரங்கம்:

கடந்த 25 2-88 அன்று மாலை 4.10 அளவில், சென்னை, இலயோலாக் கல்லூரி மாணவர் கருத்தரங்கம், தமிழ்த்துறைத் தலைவர் பேரா. திரு. அருளானந்தம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்களின் வரவேற்புத் தலைமையுரைக்குப் பின், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், தேசியமும் தேசிய

இனங்களும் என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவை இரண்டு மணி நேரம் நிகழ்த்தினார். அதன் பின்னர் ஒரு மணி நேரம் மாணவர்களின் வினாக்களுக்கு விடையளித்தார். — இறுதியில் திரு. அருள். மாணிக்கம் நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. — செய்திகள்: நம் சிறப்பு செய்தியாளர்

## 5. புதுக்கோட்டை பாவலர் அழகுநிலவன் -- வளர்மதி இல்வாழ்க்கை ஏற்புவிழா:

தி.பி. 2019 மீனம் 17 (30-3-88) அறிவன் முற்பகல் 9.30 மணியளவில், புதுக்கோட்டை திலகர் திடல் அருகிலுள்ள முத்து திருமண மண்டபத்தில் புதுக்கோட்டை திருமிகு இராம. சீனிவாசன் — சிந்தாமணி ஆகியோர் செல்வன் அழகு நிலவன் என்னும் சீனி. இராமச்சந்திரனும்,

சென்னை திருமிகு மு. இராமையா — நாகம்மாள் ஆகியோர் செல்வி வளர்மதியும் இல்வாழ்க்கை ஏற்ற இனிய விழா, உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சீரிய தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

தொடக்கத்தில், குளத்தூர் வட்ட உ.த.மு.க. செயலர். திரு. சி.கணேசன் அவர்கள் வரவேற்று அமைந்தார். தலைமை ஏற்ற பாவலரேறு அவர்கள் தம் முன்னுரையில் தமிழர் நாட்டுத் திருமணப் பழக்க வழக்கங்கள்—தமிழ் மண முறைகள்—தமிழ் மணம் செய்விக்க இசைந்த பெற்றோர் உற்றார் சிறப்பு—மணமகன் சிறப்பு நிலைகள் பற்றி விளக்கித் திருமணத்தை நடத்திய பின்னர் குன்றாண்டார் கோவில் உதவிக் கல்வி அலுவலர் திரு. இரா. தேவராசன், கீரனூர் பள்ளித் துணைஆய்வர் திரு. சு. பாசுகரன், ஆசிரியர்கள் திருவாளர்கள் குப்புசாமி, நூருல் அலீம், சிவசாமி, சிவசங்கரன் பாவலர்கள் திருவாளர்கள் தேனி முருகேசன், யா. வென்னரசு, கவிதைப்பித்தன் புதுக்கோட்டை மாவட்ட த.ஆ.ப. ஆசிரியர் கூட்டணிச் செயலர் திரு. சா. தோ. அந்தோணிசாமி, மணப்பாறை வட்ட உ.த.மு.க. செயலர் திரு. திருக்குறள். புலவர். நாவை. சிவம், புதுக்கோட்டை மாவட்ட உ.த.மு.க. செயலர். திரு. இரா. பாவாணன், உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர் தென்னவன்கோ, முதலியோர் மணமக்கட்கு உரையாலும் பாட்டாலும் வாழ்த்து வழங்கினர். தென்மொழி அன்பர்களும் உ.த.மு.க. அன்பர்களும், ஆசிரியர்களும் மணமக்கள் சுற்றத்தார்களும் சூழ்ந்தமைந்த திருமண மண்டபத்தில் இறுதியாகப் பாவலரேறு அவர்கள் தம் முடிவுரையில், ஆடு விழுந்தால் உடனே எழுந்து விடும். யானை விழுந்தால் உடனே எழ முடியாது. அதுபோல் கடந்த 3,000 ஆண்டுகட்கு முன்பே விழுந்து விட்ட தமிழ்ப்பேரினம் விழித்தெழ நெடுநாட்கள்தாம் ஆகும். அரசியல், கலைத்துறை போன்ற கவர்ச்சி ஆர்ப்பாட்டங்களின் தாக்குதலால் நம் மொழி, இனம், பண்பாடு சீர்குலைந்து கிடக்கிறது. இதனை மாற்ற எல்லோரும் முனைப்புடன் முன் வர வேண்டும் என்று வேண்டி, மணமக்களை வாழ்த்தி அமைந்தார்.

மணவிழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த எல்லோருக்கும் பாவலர் வெள்ளிநிலவன் நன்றி கூறியபின் விழா நிறைவெய்தியது.

— செய்தி: நாவை சிவம்.

### 6. திண்டுக்கல் தமிழ்ச்சங்கம், பாவேந்தர் விழா :

சென்ற 24.4.88 ஞாயிறு மாலை 6 மணியளவில், திண்டுக்கல், விவேகானந்த நகர், ஆர்.கே.சி. கங்காதரன் மேற்குச் சுழற்சங்க மன்றத்தில், திண்டுக்கல் தமிழ்ச்சங்கச் சார்பில், புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனார் விழா, சங்கத் தலைவர் சி.மா.பா. மாணிக்கம் அவர்கள் தலைமையில், நடைபெற்றது. செயலாளர் புலவர். துரை. முருகையா அவர்களின் வரவேற்புரைக்கும், தலைவர் முன்னுரைக்கும் பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு உள்ளூர் வெளியூர் அன்பர்களும் திரளாக வந்திருந்தனர்.

### 7. அண்ணாமலை பல்கலைக்கழகம் சிறப்புப் பேருரை:

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் அறிஞர் பெருமக்கள் சிறப்புப் பேருரை வரிசையின் ஆறுவது சொற்பொழிவு, சென்ற 27-4-88 அறிவன் கிழமை காலை, மாலை இரண்டு வேளையும், தமிழ்த்துறை நூலகத்தில் நடை பெற்றது. இரண்டு நிகழ்ச்சிகளும், தமிழ்த்துறைத் தலைவர் தமிழாகரர், கலைமாமணி, பர். ஆறு. அழகப்பனார் தலைமையில் நடைபெற்றன. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'தூய தமிழ் இற்றை அறிவியல் காலத்திற்குப் பொருந்துவதா' என்னும் தலைப்பில் காலையிலும், 'திருக்குறளும் இனநல முன்னேற்றமும்' என்னும் தலைப்பில் மாலையிலும் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார். நிகழ்ச்சிக்கு மாணவ மாணவியர்களும் பேராசிரியர்கள் பலரும், உள்ளூர் வெளியூர் தென்மொழி, தமிழ்நிலம், உ.த.மு.க. அன்பர்களும் வந்திருந்தனர். மாலையில் திரு. அழ. பழனியப்பன் (துணைப்பேராசிரியர்) நன்றி கூறினார்.

### 8. நெடுமாறன் எழுதிய 'பிரபாகரன்' நூல் வெளியீட்டு விழா :

தமிழ்நாடு காமராசு பேராயத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் எழுதிய 'பிரபாகரன்' நூலின் வெளியீட்டு விழா, 19.5.88 வியாழன் மாலை 6 மணிக்கு, சென்னை, எழும்பூர் பெரியார் திடலில், கருநாடகத் தமிழர் பேரவைப் பொதுச் செயலர் ப. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. புலவர் அ.கி. செல்வக்கணபதி வரவேற்புரை செய்தார். பின்னர் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி அவர்கள் நூலினை வெளியிடவும், திரைப்பட இயக்குநர் திரு. வ. செ. குகநாதன் அவர்கள் முதல் படியைப் பெற்றுக் கொள்ளவும் செய்தனர்.

அடுத்து நூலை வரவேற்றும், திறனாய்வு செய்தும் பாவலர் மகிபை. பாவிசைக்கோ, சுப. வீரபாண்டியன், பழ. கருப்பையா,

Scanned with CamScanner

கோவை: மகேசன், பேரா. சாலினி. இளந்திரையன், பேரா. சாலை இளந்திரையன், ஆகியோர் உரைக்குப் பின், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அவர் உரைக்குப் பின்னர் இரா. செழியன். அவர்கள் வாழ்த்துரைத் தார். இறுதியில் நூலாசிரியர் நெடுமாறன் அவர்கள் அறிஞர் களின் வாழ்த்துரைகளையும் திறனாய்வுரைகளையும் ஏற்று உரைநிகழ்த்தினார். விழா இரவு 9 மணியளவில் நிறைவுற்றது.

## 9. தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமை மாநாடு:

சென்னை, அறிவியக்கப் பேரவை சார்பில் தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமை மாநாடு கடந்த 22-5-88 அன்று காலை 10 மணி முதல், மாலை 9 மணி வரை சென்னை, மாவட்ட நடு வண் தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில், காலை நிகழ்ச்சி பேராசிரியர் சாலை. இளந்திரையன் தலைமையிலும் பகல் நிகழ்ச்சி பேரா. சாலினி — இளந்திரையன் தலைமையிலும் மாலை நிகழ்ச்சி மீண்டும் பேரா. சாலை. இளந்திரையன் தலைமையிலும் நடை பெற்றது. காலைக் கருத்தரங்கில் திருவாளர்கள் ப. நெடு-மாறன், பேரா. தமிழ்க்குடிமகன், பேராசிரியை திருவாட்டி தாயம்மாள் அறவாணன், தோழர் பெ. மணிரயசன், பாவலர் இன்குலாப் ஆகியோர் உரை நிகழ்த்தினர். மாலை இறுதி உரை யாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்த்தேசிய இனத்திற்கு வாழ்வுரிமைகள் அனைத்தும் கிடைக்க வேண்டுமா-னால் தமிழ்நாடு தன்னுரிமை பெற்றே ஆக வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தி உணர்வுரையாற்றினார். இறுதியில் நிகழ்ந்த பேரா. சாலை அவர்களின் தலைமை முடிவுரைக்குப் பின் திரு. நாத்திகநந்தனார் அவர்களின் நன்றியுரையுடன் இரவு 9-30 மணி யளவில் மாநாடு இனிது நிறைவுற்றது.

## 10. துரையரசன் -- வெற்றிச்செல்வி(விசயா) வாழ்க:

கடந்த விடைத்திங்கள் 14-ஆம் (27-5-88) வெள்ளிக் கிழமை யன்று காலை 9 மணியளவில், தென்மொழியன்பர் செல்வன் துரையரசன் பொறி. இ. அவர்களுக்கும், விசயா என்ற வெற்றிச் செல்வி க. இ. க்கும். திருவாரூர் எத்திராசு திருமண மண்ட-பத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் இனிதே திருமணம் நடைபெற்றது. பாவலரேறு அவர்கள் தம் நீண்ட வாழ்த்துரையில் தமிழினம் உரிமை மீட்புப் பெறவில்லையானால் இனமே அழிக்கப் பெறும் என்றும், மணமக்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு பகுதியைத் தமிழின முன்னேற்றத்திற்கு உழைப்பதில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் கூறினார்.

## 11. தென்மொழி இல்லம் -- புதுமனை புகுவிழா:

நிகழும் தி. பி. 2019, விடைத்திங்கள் 20 - (2-6-88) ஆம் நாள் காலை 10-ஆம் எண் உள்ள, திரு. வை. வெற்றியழகன் (செயராமன்) — திருவாட்டி. மனோன்மணி இணையோரின், தென்

சிறப்பு மடல்:

# தமிழர் சிலையைத் தகர்த்தால் 'கேள்வி கேட்பார் இல்லையா?'

அன்புமிக்க ஐயா,

28-5-88-இல் வெளிவந்த நாள் இதழ்களில் திருச்சி வானொலியில் பணியாற்றிய வடிவேல் இராவணனும், திருச்சியைச் சேர்ந்த ஈகவரசனும் சிறைப்பிடிக்கப்பட்ட செய்தியும், பொழிலன், புலவர். கலியபெருமாள் இன்னும் பலர் விரைவில் சிறைப்பிடிக்கப் படுவர் என்னும் செய்தியும் வந்திருந்தன. நேரு சிலைக்குக் குண்டு வைப்பு நிகழ்ச்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாய்க் குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தன. தென்மொழி அலுவலகத்தில் காவலர்களின் உசாவல்கள் நடைபெறுவதாகத் தமிழ் நிலம் அறிவித்துள்ளது. காவலர்கள் இது தொடர்பாகத் தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள் என வைத்துக் கொள்வோம். இவர்களுக்குப் பார்ப்பனர் ஆட்சி அழுத்தங்களைக் கொடுக்கும் என்பதை நாம் அறிவோம். ஆயின் கலைஞர் சிலைஉடைப்பு நடந்ததே, இந்தப் பரபரப்பு இல்லையே. இவ்வளவு உசாவல்களும் கிடையாதே. ஏனென்றால் அது தமிழனுடைய சிலை; அ'து என்ன ஆனால் என்ன? கவலை வேண்டாம் என்று அரசும் இருந்து விட்டது. இதழ்கள் இப்படியொரு பரபரப்பைக் கலைஞரின் சிலை உடைப்பின் போது ஏற்படுத்தவில்லை. கலைஞர் சிலையை உடைத்தவர்களைக் கண்டுபிடிப்பதில் இவ்வளவு அக்கறையும் காட்டவில்லை. அப்போது தற்காலிக முதலமைச்சராகத் தமிழன் நெடுஞ்செழியன்தாம் இருந்தார். என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது? கலைஞர் சிலை சுக்கு நூறாக உடைக்கப்பட்டு எறியப்பட்டது. நேருசிலை உடைக்கப்பட வில்லை என்றாலும் மூப்பனார், 'நேரு சில்லையை உடைக்கிற அளவிற்குத் தமிழ் நாட்டில் வன்முறைகள் தலையெடுக்கின்றன' எனக் கண்டித்தார், கலைஞர் சிலையை உடைத்தபோது வாய் திறக்காத மூப்பனார் பார்ப்பனர் ஆட்சி நடப்பதால் ஒருதலை ஞாயம் நடக்கிறது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மொழி என்னும் பெயருள்ள, புதிய இல்லத்தைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் திறந்து வைத்து, தமிழின நலக் கருத்துகளடங்கிய அரிய சொற்பொழிவை ஆற்றினார்கள். அக்கால் நீண்ட நாளைய தென்மொழி அன்பர் திரு. வெற்றியழகன் (செயராமன்) அவர்களின் தமிழுணர்வையும், தமிழின நலத் தொண்டையும் வெகுவாய்ப் பாராட்டி மகிழ்ந்தார்கள். நிகழ்ச்சிக்கு திரு. மாணிக்க வாசகம் அவர்கள் தலைமையேற்றார்கள். வரவேற்புரையைத் திரு. வெற்றியழகன் அவர்கள் ஆற்றினார்கள். புதுமனை மக்களை வாழ்த்திப் புலவர் அறிவுடைநம்பி (அரிஅரன்) உரை நிகழ்த்தினார்கள். இறுதியில் புலவர் தங்கவேல் அவர்களின் நன்றியுரைக்குப் பின்னர் அனைவர்க்கும் இனிய பகல் விருந்து படைக்கப் பட்டது.

வடநாட்டில் காமராசு அவர்கள் இருந்த அறையில் தீ வைத்தனர், வட நாட்டார்கள். அவரைக் கொல்ல முயற்சிகள் நடந்தன. இந்தப் பரபரப்பில்லை. என்ன நடவடிக்கைகள் எடுத்னர்? செய்திகளையே இருட்டடிப்புச் செய்து விட்டார்கள். 24-5-88 -இல் தினமலர் (நெல்லைப் பதிப்பு) வடிவேல் இராவணன் ஊரில் கலகலப்பில்லை. என்ற தலைப்பில் 8- ஆம் பக்கம் செய்தி வெளியிட்டு இருக்கிறது. நான்காவது பத்தியில் வடிவேல் இராவணன் தாழ்த்தப்பட்ட இனம் என்று மக்களுக்கு அறிமுகஞ்செயது வைக்கிறது.

வடிவேல் இராவணன் தாழ்த்தப்பட்டவர் — என இப்போது கூறுவதற்கு என்ன தேவை வந்தது? சாதிவேற்றுமையைக் கைவிட மறுக்கும் தமிழர்களிடம் ஒருபகை உணர்ச்சியையும் உண்டாக்க தினமலர் இப்படி இழிவுபடுத்தியுள்ளது. பார்ப்பனர்களுக்குத் தமிழர்களை ஒடுக்க சாதி ஒரு நல்ல கருவி. முன்னொரு தடவை தாலமுத்து, நடராசன் தமிழ் மொழிக்கு உயிர் விட்ட போதும் இராசாசி அவர் தாழ்த்தப்பட்டவர் எனக் கூறினர். தாழ்த்தப்பட்டவனுக்கு உணர்ச்சி வரக் கூடாது என்பது பார்ப்பனரின் அசைக்க முடியாத எண்ணம். அவர்கள் சாகவேண்டியவர்கள். தண்டிக்கப்பட வேண்டியவர்கள், என்பது பார்ப்பனர் சாதி வேற்றுமையால் ஒருவன் துன்பப்பட்டால் இன்னொருவன் வாய்முடி இருப்பதால் இந்த எண்ணம் — இழிவு தமிழர்களுக்கு வருகிறது.

எனவே தமிழர்களே! நீங்கள் எந்தக் கட்சியானாலும், எந்தச் சாதியானாலும் சரி, நாம் அனைவரும் தமிழர்கள் என்ற உணர்வோடு வாழவேண்டும். அல்லது நம்மை ஒழித்துக் கட்ட பார்ப்பனர் கட்சித் திட்டங்களைப் போடும். இலங்கையில் தமிழர்களை அழிப்பது இதற்கு எடுத்துக்காட்டு, தமிழ் நாட்டிலும் அது போன்று நடக்காது என்பதற்கு என்ன உறுதி? அதனால் வடிவேல் இராவணன், ஈகவரசன் சிறைப்பிடிப்பு இன்னும் வரும் தொல்லைகளையும் எதிர் நோக்கிப் பார்ப்பனர் ஆட்சியை அகற்றிடப் போராடியே ஆக வேண்டும் என்பதை உறுதியாக உள்ளத்தில் இருத்துங்கள். அன்புள்ள,

— அதியமான், தாழையூற்று.


## “தென்மொழி” சென்னை-5

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : | உருபா 24.00 |
| அரையாண்டுக் கட்டணம் | : | ,, 12.00 |
| தனியிதழ் | : | ,, 2.00 |

ஓரிதழுக்கு உருபா 4.00 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

லாண்மை உணர்வோடு ஒடுக்கி வருகின்றார்கள். ஆகவே நாம் மற்ற தேசிய மொழி, இன, மக்களைச் சமநிலை ஆட்சி அமைப்பு என்ற உணர்வுடன் ஒன்று திரட்டுவது மூலம் தான் இந்தியா-வில் உள்ள தீண்டாமை, சாதி, அறியாமை, வறுமை, ஆகிய வற்றை ஒழித்துச் சமஉரிமை, சமவாழ்வு, சமத்தகுதி உள்ள மக்களை உருவாக்க முடியும் என்பது எமது கருத்தாகும்.

தங்களின் திறமையும் ஆற்றலும் இதற்காகப் பயன்படுத்து வீர்கள் என்று பெரிதும் நம்புகிறேன்; எதிர்பார்க்கிறேன். தங்கள் நலம் விரும்பும், தோழமையுள்ள

— க. பஞ்சாட்சரம், ஆசிரியர் 'அறிவுவழி' தமிழ்நாடு
பகுத்தறிவு சமதர்ம இயக்கம், சென்னை:106

O: 1296: தென்மொழி எனும் எழில் தேன்தமிழ்ச் சுவடியைக்
கண்ணுறும் பேறுகிடைத்ததடா! — அதில்
பொன்னிகர் கருத்துகள் மின்னியே மிளிர்ந்ததை
எண்ணினேன் நெஞ்சம் நெகிழ்ந்ததடா! — நம்
அன்புள்ளத் தமிழினம் புண் மனத்தினரினால்
கொன்றிடும் கொடுமைகள் குறைகிலையே! — அந்த
முண்டையின் மகனவன் சண்டியன் குணத்தினால்
துன்புற்றுப் புலிகளும் துடித்தனரே! — இந்த
இன்னல்கள் அகன்றிட நன்மைகள் நிறைந்திட
ஒன்றிணைந்திடுவீர் தோழர்களே! — அடப்
பண்புள்ளத் தமிழரே முன்புள்ள மறவராய்
உங்களை உடனே மாற்றிடுவீர்! — தமிழ்
உயர்ந்திட உறுதியை ஏற்றிடுவீர்!

இன்னணம்
பாவலர். செ. கதிரவன், சென்னை-82.

O: 1297: அன்புடையீர், வணக்கம். தங்களின் "செயலும் செயல் திறனும்" எனும் நூல் வெளியீட்டு விழாவிற்கு வந்திருந் தேன்! முப்பது (30) ஆண்டுகளாகத் தொடர்புடைய 'தென் மொழி' அன்பர்களையே காணமுடிந்தது. அங்கு வந்திருந்தவர்-கள் — உள்ளம் மாறாதிருப்பினும், உருமாறியிருந்தார்கள். அவர் களிடம் நரை,திரை யெல்லாமே தெரிந்தன.

அங்கு வந்திருந்தவர்கள் அனைவருமே தங்களை அன்பு செய்ப வர்களே! மிகவும் புகழுந்துரைத்து மதித்தார்கள்!

இரண்டாம் உலகப் போருக்கே எத்தனைப்பேர் காரணம் அறிவீர்களா? ஆறே ஆறுபேர்களே! அந்த ஆறுபேர்களே இட்லரை அறிந்தவர்கள்; அன்பு செய்தவர்கள், உயிர் மதிப்பு வைத்திருந்தவர்கள்.

இவ்வுலகம் முழுமைக்கும் பரவியுள்ள 'கிறித்துவம்' விளக்-கும் உண்மை என்ன? 'வழிகாட்டப் பட்டவர்களுக்கு, வழி காட்டியவர் வாழ்ந்து, உயிரையும் விடும் ஈகம் (Sacrifice) செய் தார் என்பதே. நம் 'வள்ளுவம்' வாழாமைக்கும் உலகெல்லாம் பரவாமைக்கும் காரணம் — கிறித்துவைப் போல் திருவள்ளுவர் தம் கொள்கைகளான திருக்குறள் நெறிகளுக்காக ஈகம் செய்ய வில்லை என்றும் கூறப்படுகிறது. மேலும் — கிறித்துவின் கொள் கைகளை ஏந்திக் கொண்டு உயிர் வாழ்ந்து, உயிரையும் விட்ட பன்னிவருவர் போன்று, திருக்குறளைப் பின்பற்றியவர் (Disciples) களும் இல்லை!

இவற்றிலிருந்து என்ன தெரிகின்றது? தங்களை மதிக்கின்ற வர்கள், அன்பு செய்கின்றவர்கள், தங்கள் கொள்கைகளுக்காக உயிர்வாழவும் வேண்டும்; உயிரை விடவும் வேண்டும்! விடுதலை என்பது — அதிலும் தமிழ், தமிழின, தமிழ் நாட்டு விடுதலை

Scanned with CamScanner

என்பது வெறுமனே வந்துவிடாது! தன் உயிரையே கொடுத்தும், தமிழக விடுதலைக் கெதிரான உயிர்களை எடுத்தும் பழக்கப்பட்டாலன்றி ஒருபோதும் கை கூடாது! ''தமிழ் நாட்டு விடுதலை என்பது மூன்றாவது உலகப்போர் ஏற்படாமல் கிடைக்கப் போவதில்லை என்பதும் உறுதி! பிற பின்னர் தொடரும்!''

அன்பன் கணியன், புதுவை.

(ஆசிரியர் குறிப்பு: இவ்வளவு சொல்லும் நீங்களாவது இக் கருத்துகளைச் செயல் படுத்த அணியமாக இருக்கிறீர்களா என்று எண்ணிப் பார்க்கவும். — ஆ—ர்)

O: 1298: அன்பரே, ஏதோ ஒரு புத்தகத்தின் நடுவில் உம்முடைய பேரால் வெளியிடப்பட்ட ''உலகத் தமிழின எதிர் காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு 1986 — டிசம்பர் 27-28'' என்ற அறிக்கையைக் கண்ணுற நேர்ந்தது. அதைப் படித்ததும் மிகவும் துயரமும், (வேதனையும்), வெறுப்பும் உண்டாயின. அன்பரே! உங்களை நேராக ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். தமிழின எதிரிகள் யார் யார் என்பதை நீர் திட்டவட்டமாகக் கூறவேண்டும். வடநாட்டுப் பார்ப்பனர்களா உங்களை அடக்கி ஒடுக்கி ஆண்டு கொண்டிருக்கிறார்கள்? எங்கிருந்தோ வந்து இந்தியாவைச் சூறையாடின முசுலீம்களும் துருக்கர்களும் உங்களை அடக்கி ஒடுக்கி ஆளவில்லையா? வேலூர் கோட்டையிலும் வட ஆர்க்காட்டிலும் தற்போது பாதி மக்கள் தொகையுள்ள முசுலீம்கள் யார்? தமிழ் அரத்தம் ஓடிக்கொண்டிருக்கும் நம் உடன்பிறந்தவர்களாகிய அரிசனங்களைக் குசினி ஆட்களாக அமைத்து நடத்தி வந்த ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடி இந்தியாவுக்கு யாரையா விடுதலை வாங்கிக் கொடுத்தது? அவர்களெல்லாரும் உங்களைப்போலவும் மற்றும் உள்ள தமிழ் விடுதலைப் புலிகளைப் போலவும் இந்த மாதிரி வேற்றுமைக் கருத்துகளை மேற்கொள்ளவில்லை. தமிழை வளர்த்தவர் யார்? பார்ப்பனர்கள்தாம்!

— பா. கிருட்டிண சுவாமி, சிங்கப்பெருமாள் கோவில் 603204.

O: 1299: தமிழினம் காக்கும் தூயதமிழ் நெஞ்சே! வணக்கம்! தங்களுடன் நீண்ட நேரம் பேசலாமென ஆவலுடன் வந்தேன். ஆனால் நேரத்தின் பயன் கருதி எனது கருத்தை மாற்றிக் கொண்டேன். சுவடி 23 ஓலை 12 'தமிழகத்தின் இருண்ட சூழ்நிலை மறைந்தது' என்னும் ஆசிரியவுரையைப் படித்து என்னுடன் வந்திருந்த நண்பர் மிகவும் கவன்றார். ஆனால் 'தமிழினத்திற்காக உண்மையான எண்ணத்துடன் தொண்டாற்றி வரும் ஐயா அவர்கள் இவ்வாசிரியவுரை எழுதியது சரியானது' என்று, சிறிது நேரம் தாங்கள் விளக்கிப் பேசியதிலிருந்து என் நண்பர் அறிந்து கொண்டார். என்னுடைய சென்னை நண்பர்களும் அவ்வாசிரிய வுரையைப் படித்ததும் மிகவும் துணிச்சலான செயல் என்றனர். 'இவர்தாம் தமிழினத்தைக் காப்பவர்' என்று கூறினார்கள். தங்களைப் பற்றி மேலும் கேட்டறிந்தனர்.

உ. த. மு. க. இயக்கம் குறித்துத் தாங்கள் பேசியது கண்டு மிகவும் வருந்தினேன். பொருள் ஏந்து ஒன்றுதான் இயக்கம் நடத்தத் தடை என்று கூறினீர்கள். தங்களின் சிக்கல்களை நாங்கள் அறியாதவர்களல்லர். இருப்பினும், தாங்களே சோர்வடைந்தால் தமிழினம் மீட்சியடைவது என்று? எவரால் மீட்சியடையும்? தங்கள் தலைமையால்தான் தமிழினம் மீட்சியடைய முடியும்; தமிழினம் விடுதலை அடையும் — என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். — இ. அருள்நேயன், ஒ. கோவில் பட்டி.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)

Scanned with CamScanner